பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 14 திங்கட்கிழமை (30-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:246

# அரசமைப்பை மாற்றும் முயற்சியை சீர்குலைக்கின்றார் பிரபாகரன்!



## குற்றம் சுமத்துகிறார் சந்திரிகா



கொழும்பு,ஜூலை30

**நாட்டின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஏற்பட்டால் தமிழ்ச் சமூகம் தன்னை நிராகரித்துவிடும் என்பதை நன்கு அறிந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அதனால்தான் அரசமைப்பை மாற்றும் எமது முயற்சியை சீர்குலைக்கின்றார்.**

**- இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

குருநாகலில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சமயமே ஜனாதிபதி இந்தக் குற்றச் சாட்டுக்களை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஓகஸ்ட் 21 ஆம் திகதி இடம் பெறும் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஆணை கிடைத்தவுடன் புதிய அரசமைப்பை அமைத்து இனப்பிரச்சினைகுத் தீர்வு காணப்படும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானை விமானத்தளத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது!

கொழும்பு,ஜூலை30

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதை அடுத்து இரத்மலானை விமானப்படைத்தளத்தின் பந்தோபஸ்து ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இரத்மலானை விமானப்படைத் தளத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளாக விங் கொமாண்டர் பாலித அபய சேகரவும் அவருக்கு உதவியாக விங் கொமாண்டர் றொஹான் சில்வாவும் விமானப்படைத் தளபதியால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இரத்மலானை விமான நிலையத்தில் யுத்த விமானங்களைத் தரையிறக்குவதற்கான வசதிகள் குறித்து அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுநாயக்கா விமானத்தளத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான 2 அதிகாரிகள் பதவி நீக்கம்!

கொழும்பு,ஜூலை30

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் மேற கொண்ட அதிரடித் தாக்குதலை அடுத்து -

அந்தத் தளத்தின் பாதுகாப்புக் குப் பொறுப்பான இரு உயர் அதிகாரிகள் அவர்களது பதவிகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

விமானப்படைத்தளபதி இதற்கான உத்தரவை விடுத்துள்ளார்.

தளத்தின் கட்டளை அதிகாரியான ஏயர் கொமடோர் ஆர்.ஐ.ஆனந்த், தளத்தின் பாதுகாப்புப் பொறுப்பதிகாரியான நிஹால் ரத்நாயக்க ஆகியோரே தத்தமது பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

விமானப்படைத்தளத்தின் புதிய கட்டளை அதிகாரியாக ஏயர் கொமடோர் சண்ணா குணரத்தின நியமிக்கப்பட்டுள்ளார். இவர் விமானப் படைத் தலைமையகத்தில் பொறியியல் பிரிவின் பதில் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றினார்.

படைத்தளத்தின் பாதுகாப்புப் பொறுப்பதிகாரியாக கிர்ஷான் ஜகம்பத் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். விமானப்படையின் நடவடிக்கைப் பணிப்பாளராக இவர் முன்னர் பணி புரிந்து வந்தார். (ஐ-3-9)

## மன்னார் பள்ளிமுனையில் சக்திமிக்க குண்டுவெடிப்பில் இருவர் உடல் சிதறிப் பலி!

வவுனியா,ஜூலை30

மன்னார் பள்ளிமுனையில் வீடு ஒன்றில் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் இடம்பெற்ற சக்தி மிக்க குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் இருவர் உடல் சிதறிப் பலியாகினர்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாக விரைந்து சென்ற படையினர் குண்டுவெடிப்பு இடம்பெற்ற வீட்டையும் அயலில் உள்ள வீடுகளையும் சோதனையிட்டு இளைஞர்கள், யுவதிகள் உட்பட 15 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை உறுப்பினர்களே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்திருப்பதாகப் படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைத் தாக்குதலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த சமயம் தற்செயலாகக் குண்டுவெடித்திருக்கலாமெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பள்ளிமுனையில் நேற்றுக் காலை 3.15 மணியளவில் தவறுதலாக இடம

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுமுகம் தொண்டமான் அறிவிப்பு:

## நாடாளுமன்றத்தில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் குறைவதை அனுமதியோம்!

## அத்தகைய அரசமைப்பை ஆதரிக்கமாட்டோம்!

கொழும்பு,ஜூலை30

மலையக மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கச் செய்யும் எந்த அரசமைப்புக்கும் ஆதரவாக வாக்களிக்கும்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களைக் கேட்காது.

- இப்படித் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான்.

நேற்று செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

எங்களைப் பொறுத்தவரை இப்போதுள்ள அரசமைப்பு - தேர்தல் முறைகள்தான் சிறுபான்மை இனத்தவருக்கு உகந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு சிறுபான்மையினரது ஆதரவும் கட்டாயம். எனவே சிறுபான்மையினருக்கு அதில் முக்கியத்துவம் கிடைக்கின்றது.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### மியாங்குளத்தில் சிப்பாய் பலி

கொழும்பு,ஜூலை30

மட்டக்களப்பு மாவட்டத்தில் மியாங்குளம் என்னும் இடத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இரு தரப்பாரிடையேயும் ஏற்பட்ட மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த மோதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருவரின் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் நிலையம் அறிவித்தது. (ஐ-3-9)

### தமிழ்க் கட்சி கூட்டமைப்பு இன்று கூடும்

கொழும்பு,ஜூலை30

சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் தற்போதைய நிலைவரம் என்பன தொடர்பாக ஆராய்வதற்காக 11 தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு இன்று கூடவிருக்கின்றது.

சர்வஜன வாக்கெடுப்பில் ஜனாதிபதி முன்வைத்துள்ள விடயங்களைக் கூட்டாக எதிர்ப்பது தொடர்பாக அங்கு ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3-9)

## ஜனாதிபதி விடுத்த அழைப்பை தமிழ்க் காங்கிரஸ் நிராகரித்தது

கொழும்பு,ஜூலை30

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் நிலை தொடர்பாகப் பேசுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ஏற்பதில்லை என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி நேற்று மாலை முடிவு செய்துள்ளது.

கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் கூடிய கட்சியின் செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள இரு விடயங்கள் தொடர்பாகத் தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கிக் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு இன்று அனுப்புவது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

## ரெலோவும் நிராகரிப்பு!

கொழும்பு,ஜூலை30

பேச்சு நடத்த வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ரெலோ அமைப்பும் நிராகரித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி ஜனாதிபதி நடத்தவுள்ள கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கோரி ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி ரெலோ அமைப்புக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அவருடன் அமர்ந்து பேசத் தயாரில்லை என்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார் (ஐ-3-9)

## குற்ற விசாரணைப் பிரேரணையில் ஜனாதிபதி மீது 12 குற்றச்சாட்டுகள்

கொழும்பு,ஜூலை30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ள குற்ற விசாரணைப் பிரேரணையில் ஜனாதிபதி மீது 12 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்ட நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என்.சொக்ஸி தலைமையிலான குழு 12 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்ற விசாரணைப் பிரேரணையைத் தயாரித்திருப்பதாகவும் -

அந்தப் பிரேரணையின் நகல் எதிர்வரும் வியாழனன்று சகல எதிர்க்

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### கடற்படைப் படகு - மீனவர் படகு மோதல்

# துரதிர்ஷ்ட வசமான சம்பவம் என்கிறது பலாலி தலைமையகம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

வடமராட்சிக் கடற்பகுதியில் கடந்த 25 ஆம் திகதி கடற்படையினரின் படகு மீனவர் படகு ஒன்றுடன் மோதிய சம்பவம் துரதிர்ஷ்ட வசமானது என்று யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தலைமையகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கடந்த 25 ஆம் திகதி அதிகாலை வடமராட்சி கடற்பகுதியில் கடற்படையினரின் படகு மீனவர் படகுடன் மோதியதால் மீனவர் ஒருவர் காணாமற் போயுள்ளார்" என்று 27 ஆம் திகதிய உதயனில் செய்தி வெளியாகியுள்ளது.

துரதிர்ஷ்ட வசமான இச்சம்பவம் இடம்பெற்றமைக்குக் காரணம், மீன் பிடிப்பதற்கு கடற்படையினரால் வழங்கப்பட்ட நேரத்துக்கு முன் கூட்டியே கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமையாகும். மீனவர்களின் பாதுகாப்பைக் கருதியே காலை 6 மணிக்குப் பின்னர் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீன் பிடிப்பதற்கு கடற்படையினரால் வழங்கப்பட்டுள்ள நேரங்களில் மாத்திரம் மீன் பிடிக்கச் செல்வதன் மூலம் இத்தகைய துரதிர்ஷ்ட வசமான சம்பவங்களைத் தவிர்க்கலாம்.

- இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:-**

*"மீனவர்களின் வள்ளத்துடன் மோதியது கடற்படைப் படகு" என்ற தலைப்பில் 26-07-2001 இல் உதயனில் வெளியான பிரஸ்தாப செய்தியில் இந்தச் சம்பவம் அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.*

(ஆ-ர்)

## ஞாயிறு தோறும் திருப்பலி பூசை

அரியாலை,ஜூலை30

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்குத் திருப்பலி பூஜைகள் ஆலய பங்குத்தந்தை அருட்திரு.சாள்ஸ் கொலின் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (ஐ-17)

## 7 குடும்பங்களே குடியமர்வு

அரியாலை,ஜூலை30

கொழும்புத்துறை ஆனந்தன் வடலிப் பகுதியில் இதுவரை ஏழு குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏனைய குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமர முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-17)

# மீளக்குடியமரும் மக்களுக்கு படையினர் அரிசி வழங்கினர்

யாழ்ப்பாணம்,ஜூலை30

தென்மராட்சி, பளை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து கடந்த வருடம் நடுப்பகுதியில் இடம்பெயர்ந்து தற்சமயம் அங்கு மீளக் குடியமரும் பொதுமக்களுக்கு படையினர் நிவாரண உதவிக்கு மேலதிகமாக அரிசியை விநியோகித்துள்ளதாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

யாழ்படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மேலதிக நிவாரண அரிசியை கடந்த 25ஆம், 26ஆம் திகதிகளில் ஈ.பி.டி.பி. அமைப்பின் உதவியுடன் 52ஆவது படையணியின் தலைமையின் கீழ் படைப்பிரிவு, கட்டளை அதிகாரிகள் வழங்கியுள்ளனர் என்றும் -

17 ஆயிரம் கிலோ அரிசி இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகவும்-

படைத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

கெமுனு படையணியினர் சரசாலையில் வைத்து ஐயாயிரம் கிலோ அரிசியையும் -

விஜயபாகு படையணியினர் மற்றும் ஈ.பி.டி.பி. அமைப்பினர் ஆகியோர் இணைந்து கைதடியில் வைதது 6 ஆயிரம் கிலோ அரிசியையும் -

விஜயபாகு மற்றும் கஜபாகு படையணிகள் அல்லாரையில் வைத்து ஆயிரத்து 250 கிலோ அரிசியையும் -

விஜயபாகு அணி வரணி, கொடிகாமத்தில் வைத்து ஆயிரத்து 250 கிலோ அரிசியையும் -

24ஆவது படையணி மற்றும் கஜபாகு படையணி பருத்தித்துறையில் வைத்து 3 ஆயிரத்து 500 கிலோ அரிசியையும்-

பொதுமக்களுக்கு வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## கமநல திணைக்கள பெயர் மாற்றம்

மூளாய்,ஜூலை30

இதுவரை காலமும் 'கமநல சேவைகள் திணைக்களம்' என்ற பெயருடன் இயங்கி வந்த மேற்படி திணைக்களத்தின் பெயர் தற்போது 'கமநல அபிவிருத்தித் திணைக்களம்'- என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய கமநல சேவைகள் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இத்திணைக்களத்தின் கீழ் செயற்படும் கமநல சேவைகள் நிலையங்களும் 'கமநல அபிவிருத்தி நிலையங்கள்' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (ஐ-99)

## பம்பாய் வெங்காயச் செய்கை ஊக்குவிப்பு

மூளாய்,ஜூலை30

வலிகாமம் மேற்குப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அராலிப் பகுதியிலேயே மேற்படி செய்கை அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வலி. மேற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் விவசாயிகளுக்கென புதிய சுழற்சி முறைக் கடன்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-99)


## குருத்துவத்தின் பத்தாவது ஆண்டின் நிறைவு விழா

மணற்காடு புனித அந்தோனியார் ஆலயம், பொற்பதி புனித இராயப்பர் ஆலயம், குடத்தனை அன்னை வேளாங்கண்ணி ஆலயம், மடுமாதா (குலான்) ஆலயம் போன்ற ஆலயங்களை உள்ளடக்கியதாக புதிய பங்காக மணற்காட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப் புதிய பங்கின் முதல் பங்குத் தந்தையாக அருட்திரு. S. அன்ரன் ஜோர்ச் அடிகளார் நியமனம் பெற்றுள்ளார். பங்குத் தந்தையின் 10ஆவது குருத்துவ வாழ்வின் நிறைவை நினைவுகூரும் முகமாக இன்று (30. 07. 2001) திங்கட்கிழமை மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 10. 30 மணிக்கு நன்றித திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பங்குத் தந்தையின் பணி சிறகக பங்கு மக்கள் அனைவரும் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

(90614) **- மணற்காடு பங்குமக்கள்.**



ஸ்ரீ ராமஜெயம்

## மனமுவந்த வாழ்த்துக்கள்

**தேற்றைய தினம் நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் அந்தண சமூகம், ஆலயங்கள் ஆகியவற்றில் ஆற்றிவரும் அரிய பணிகளைப் பாராட்டி கௌரவிக்கப்பட்ட பாகசாஸ்திர நிபுணர்**

**பிரம்மஸ்ரீ ஞா.சீதாராமகிருஷ்ண சர்மா**

(சீதா ஐயா)

**அவர்களை நாமும் பாராட்டி சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்ந்து அவர்தம் பணி சிறப்புற மனமுவந்து வாழ்த்துகிறோம்.**

ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக்குருக்கள்,

(90615) வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30.07.2001

HAPPY BIRTHDAY



சதீஸ் - றொஷானி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான

## அஜய்ந் , விஜய்ந்

இவர்கள் இருவரும் தமது முதலாவது பிறந்தநாளை இன்று (30.07.2001) திங்கட்கிழமை கோண்டாவில் கிழக்கு காளிகோவிலடியில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். செல்வங்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமாரான ரமேஷ் (ஜேர்மனி), சுரேஷ் (ஜேர்மனி), பெரியம்மா அனுஷா (ஜேர்மனி), அத்தைமாரான றசினி (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), மாமாமாரான பிரபு (சுவிஸ்), செல்வராசன் (சுவிஸ்) மற்றும் அத்தான் அபிநாஸ் (சுவிஸ்), நிரோஜன் மாமா, சபேசன் மாமா, குமார் சித்தப்பா, தர்சி அன்ரா அனைவரும் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் மகாகாளி அம்பாளின் துணையோடு நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய்.* (90582) - **நிரோஜன்** (மாமா)


# பங்கீட்டு அட்டைக்கு மா விநியோகம்

அரியாலை,ஜூலை30

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவின் விநியோகம் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஐந்து கிலோவுக்கு மேற்படாமல், மா பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-17)


## கண்ணீர் அஞ்சலி



**காரையம்பதி ஈழத்துச் சிதம்பரம், மணற்காடு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆஸ்தான வித்துவான், இசைநாதமணி, இசைச் சக்கரவர்த்தி, நாதஸ்வர வித்துவான்**

## என்.கே.கணேசன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

*"இசையின் இமயம் சரிந்தது. காரை மாதா கதி கலங்கினாள்"*

*மணற்காடு,*
*காரைநகர்.*

நிர்வாகத்தினரும்,
தேர்த் திருப்பணிச் சபையினரும்,
(C/17630) கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.



## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்



**காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான ஆஸ்தானவித்துவான், இசைநாதமணி, இசைச்சக்கரவர்த்தி, நாதஸ்வர வித்துவான்**

## N.K.கணேசன்

அவர்களின் மறைவு காரைவாழ் மக்களிற்கும், கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

*காரைநகர்.* (C/17629) - **மணிவாசகர் சபையினர்.**



# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தையா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தையா நேற்று(29-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் மகேஸ்வரி, சிவராசா மற்றும் காயாரோகணர் (ஆசிரியர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராசா, குணவதி, காலஞ்சென்ற விஸ்வநாதன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், உருத்திரகுமார் (குமரன்), மீரா, சுகுமார் (யாழ். கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-07-2001) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.* (90616) கந்தையா காயாரோகணர் (மகன்)

## கந்தையா ஜெகதீசன்

நாராந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா ஜெகதீசன் 28-07-2001 சனிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

இவர் பேரின்பநாயகியின் (இன்பம்-நெசவு சிரேஷ்ட மேற்பார்வையாளர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் திருமதி நல்லநாயகி - இரத்தினம், ஈஸ்வரநாதபிள்ளை, கனகமணி, தியாகராசா, இந்திராதேவி, தீனதயாளன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சிவஞானம், நாகரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும், திருமதி அரவிந்தநாயகி - சுப்பிரமணியம், செல்வி உதயகுமாரி (மாகாணக் கல்விப் பணிமனை, வடக்கு-கிழக்கு), திருமதி ஜெயக்குமாரி நவநீத கிருஷ்ணபிரசாத் (பிரான்ஸ்) ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 50, கடற்காட்சி வீதி, திருகோணமலையில் நேற்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

ச.ஈஸ்வரநாதபிள்ளை (சகோதரன்)
சுதுமலை

*"றெட்னா பவனம்"*
*3ஆம் கட்டை,*
*கல்வியங்காடு.* (90619) திருமதி நா.சிவஞானம் (மாமியார்)
கல்வியங்காடு

# மண்டையோடு விற்ற வர்த்தகர் கொல்கத்தாவில் கைதானார்

## எலும்புக்கூட்டின் விலை 200 டொலராம்

கொல்கத்தா,ஜூலை30

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் வியாபார நோக்கில் சட்ட விரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 500 மண்டையோடுகள் மற்றும் எலும்புக்கூடுகளை கைப்பற்றிய பொலீஸார் இது தொடர்பாக சமீபத்தில் தினேஷ் ஆருர் என்ற வர்த்தகரையும் கைது செய்தனர்.

மத்திய கொல்கத்தாவின் வெளியாக்பூர் என்ற இடத்தில் சேமிப்புக் கிடங்கொன்றில் இருந்து இந்த மண்டையோடுகளைத் தற்செயலாகத் தாம் கண்டுபிடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள தினேஷ் ஆருர், கடந்த 16 ஆண்டுகளாக தான் மண்டையோட்டு வியாபாரம் செய்வதாகவும் -

எலும்புக்கூடு ஒன்று இருநூறு அமெரிக்க டொலர்களுக்கும், மண்டையோடு ஒன்று நூறு அமெரிக்க டொலர்களுக்கும் விற்று வந்ததாகவும் - பொலீஸாரிடம் தெரிவித்தார்.

உடல் கூற்றியல் தொடர்பான கல்வியில் பயன்படுத்தவும், வெளிநாடுகளில் அதிக மதிப்பு வாய்ந்த கைவினைப் பொருள்களைச் செய்யவும், மண்டையோடுகளும், எலும்புக்கூடுகளும் கடத்தி விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் 'சிலிகுரி' பஸ் நிலையத்தில் 83 மண்டையோடுகளைப் பொலீஸார் கண்டுபிடித்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

உலக அரங்கில்

### வாஹிட் வெளியேறினார்

இந்தோனேசியாவில் அதிபர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட அப்துல் ரஹ்மான் வாஹிட், அதிபர் மாளிகையிலிருந்து வெளியேறினார்.

[illegible] மருத்துவ சிகிச்சைக்காக தனது குடும்பத்தவர் சகிதம் வாஹிட் விமானம் மூலம் நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றார்.

## கருணாநிதியைக் கைது செய்த சென்னை பொலீஸ் ஆணையாளர் மத்திய அரசுப் பணிக்கு மாற்றம்

சென்னை,ஜூலை30

சென்னை பொலீஸ் ஆணையாளர் முத்துக்கருப்பன் உட்பட 3 பொலீஸ் அதிகாரிகளை மத்திய அமைச்சக செயலகத்தின் சிறப்பு அதிகாரிகளாக இந்திய அரசு பணி நியமனம் செய்துள்ளது.

இதற்கான உத்தரவு நேற்று முன்தினம் மாநில அரசுக்கு 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. முன்னாள் முதல்வர் கருணாநிதி கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அதிகாரத்தை மீறிச் செயல்பட்டதாக இந்த மூன்று அதிகாரிகள் மீதும் குறை கூறப்பட்டது.

இந்த நிலையில் இவர்கள் மத்திய அரசுப் பணியில் அமர்த்தப்பட்டது, இவர்களை மாநில அரசுப் பணியிலிருந்து விலக்கி வைக்கும் நடவடிக்கை என்றே கருதப்படுகிறது.

இதேசமயம், தேசிய பாதுகாப்புப் படைத் தலைவராக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட அர்ராஜ கோபாலனை, மாநில அரசு பணியிலிருந்து விடுவிக்க தமிழக அரசு தாமதித்து வருகிறது. (ஒ-6)

## முன்னாள் இணை அமைச்சர் ஒருவர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத்,ஜூலை30

பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு இணை அமைச்சர் மொகமட் சித்திக்கான் மற்றும் அவரது நண்பர் ஆகியோர் நேற்றுமுன்தினம் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தெற்கு பாகிஸ்தானில் சித்திக்கானும், அவரது நண்பரும் [illegible] கூட்டமொன்றுக்கு சென்று [illegible]ருந்தபோது, வழிமறித்த முகமூடி அணிந்த 5 பேர், அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றதாக பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவித்தனர்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் கட்சியிலிருந்து சமீபத்தில் மற்றொரு முன்னாள் பிரதமரான பெனாஸிர் பூட்டோவின் கட்சிக்குத் தாவிய சித்திக்கான், அடுத்த மாதம் நடைபெற உள்ள லோக்ரான் நகர மேயர் பதவிக்குப் போட்டியிடவிருந்தார்.(ஒ-6)


## ஆசிகூறி வாழ்த்துகின்றோம்

வடகோவை - கேணியடி நாகதம்பிரான் - வைரவர் ஆலய புனருத்தாரண வேலைகளுக்காக ரூபா மூன்று லட்சம் நிதியை ஒதுக்கி, அதிலே ரூபா ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்தை உடன் வழங்கி, ஆலயத்தின் திருப்பணி வேலைகள் தொடங்க உதவிசெய்த



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரம் இந்து கலாசார அமைச்சரும் ஈ.ம.ஜ.கட்சியின் செயலாளர் நாயகமுமான*

**மாண்புமிகு அமைச்சர்**

**K.N.டக்ளஸ் தேவானந்தா** *அவர்களையும்*

*ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான*

**கௌரவ K.V.குகேந்திரன்** (ஜெகன்) *அவர்களையும்*

*வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்*

**திரு.பூ.குணசிங்கம்** *அவர்களையும்*

*வலி.கிழக்கு பிரதேச சபை உபதலைவர்*

**திரு.U.L.A.ரவி** *அவர்களையும்*

மற்றும் இந்நிதி கிடைப்பதற்குச் சகல வழிகளிலும் உதவிகள் வழங்கிய ஏனையவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இவர்களது பணிதொடர எல்லாம் வல்ல கேணியடி நாகதம்பிரான் ஆதிவைரவப் பெருமான் அருள்புரியவேண்டி ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

பரிபாலனசபை

சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள்

*(தலைவரும் ஆதீன கர்த்தாவும்)*

*கேணியடி,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (90595)



## கண்ணீர் அஞ்சலி

அரியாலை வாசியான

**கிருஷ்ணபிள்ளை அன்னம்மா**

**அவர்கள் 27.07.01 அன்று லண்டனில் இறைபதமடைந்த[illegible]விட்டு, அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருடன் இங்கு வசிக்கும் உறவினர்களாகிய நாமும் சேர்ந்து துயரத்தில் பங்கேற்பதோடு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவ[illegible] பிரார்த்திக்கின்றோம்.**

*18.இளையதம்பி வீதி,* மு.சோமசுந்தரம், இ.மாசிலாமல[illegible]

*அரியாலை.* (90607) (மைத்துனர்கள்)



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தந்தமைக்காக**



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய கௌரவ

**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.

**பூ.குணசிங்கம்** (J.P.U.M.)

அவர்களையும்



வலி.கிழக்குப் பிரதேச சபை உப தலைவரும், வலி.கிழக்குப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய உயர்திரு.

**U.L.A.ரவி**

அவர்களையும்

**நன்றியுடன் பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.**

நிரந்தர நியமனம்பெற்ற
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகம். (90596)



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்









**எமது ஆலயங்களின் கட்டட புனருத்தாரணப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கி, சிறப்பான பணிகள் புரிவதற்கு எம்மை ஊக்குவித்தமைக்காக**

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்

**செயலாளர் நயகமுமாகிய மாண்புமிகு கௌரவ அமைச்சர்**

**திரு.கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்,**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான,

**திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்) அவர்களையும்,**

வலி. கிழக்கு (நீர்வேலி) பிரதேச சபைத் தலைவர்,

**திரு.பூ.குணசிங்கம் ஜே.பி.யு.எம். அவர்களையும்,**

வலி. கிழக்கு (நீர்வேலி) பிரதேச சபை உபதலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (கோப்பாய்) அமைப்பாளருமான,

**திரு.யூ.எல்.ஏ.ரவி ஜே.பி.யு.எம் அவர்களையும்,**

இறையருள் பெற்று, சிறப்பான பணிகளாற்றி மேன்மேலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென்று ஆண்டவனை இறைஞ்சி, நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
*தனிப்பனை*
*வீரபத்திர சுவாமி கோயில்,*
கோப்பாய் தெற்கு, இருபாலை.

**லிங்கப் பிள்ளையார்கோயில்,**
கேணிக்குளம்,
இருபாலை கிழக்கு,இருபாலை.

(90601)

# கட்டுநாயக்க விமானதள தாக்குதலை புலிகள் 'வீடியோ' படம் எடுத்தார்களா?

## சம்பவம் குறித்து 3 குழுக்களின் விசாரணைகள் மும்முரம்

கொழும்பு, ஜுலை 30

கட்டுநாயக்க படைத்தளம் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் 'வீடியோ'ப் படம் எடுத்தார்களா?

இந்த வீடியோப் படத்தை எடுத்த புலிப்போராளிகள் தப்பிச் சென்றுவிட்டனரா?

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலீஸாருக்கு இந்தச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல்களை நடத்தும் போது பிரசார நடவடிக்கைகளுக்காக வீடியோ படம் எடுப்பது வழமையாகும்.

இவ்வாறு படம் எடுத்த புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கக்கூடும் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது

கட்டுநாயக்கா தாக்குதல் சம்பவத்தில் 14 புலிகள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 3 குழுக்கள் விசாரணை

இதேவேளை —

கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக மூன்று விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன, எனினும் இதுவரை முக்கிய திருப்பம் எதுவும் கிட்டவில்லை.

ஆறு படை உயர் அதிகாரிகளைக் கொண்ட விமானப் படை விசாரணைக்குழு இரகசிய பொலீஸ் பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு ஆகிய மூன்று குழுக்களும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. தாக்குதல் நடத்தப்பட்ட முதல் நாள் ரவு குறான பகுதியில் உள்ள விமானப்படை சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த மூன்று விமானப்படை வீரர்களும் இரகசியப் பொலீஸாரினால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

(க-7)

# சிறந்த விவசாயி தெரிவுப்போட்டி குடாநாட்டில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜுலை 30

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டி ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயிகள் தெரிவுப் போட்டியை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் விவசாயத் திணைகளம் செய்து வருகின்றது இவ்விடயம்சம்பந்தமாக அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் தமது பகுதி விவசாயச் சம்மேளனங்களின் ஊடாக விண்ணப்பம் செய்ய முடியும்.

போட்டியில் வெற்றி பெறும் விவசாயிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-99)

# ஆசிரியர் கலாசாலைகள் விடுமுறை

யாழ்ப்பாணம், ஜுலை 30

நாட்டில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி மூடப்பட்டு, மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 28 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[க-7]

# குடாநாட்டில் தென்னைகளில் பரவிவரும் 'மைற்ஸ்' நோய் தொடர்பான ஆய்வுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 30

யாழ். குடாநாட்டில் மிக வேகமாகப் பரவிவரும் தென்னை மரங்களைத் தாக்கும் ''மைற்ஸ்'' நோயை உயிரியல் கட்டுப்பாட்டு முறை மூலமாகக்கட்டுப்படுத்துவதற்குரிய புதிய ஆய்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயன முறையைக்கையாண்டு, கிருமிநாசினி வகைகளை உயர்ந்த தென்னை மரங்களின் மீது விசிறும் போது சுற்றுப்புறச் சூழல்மிக மோசமாகப் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் அதிகம் உள்ளது. இதனால் சூழல் பாதிப்புக்கள் எதுவுமற்ற உயிரியல் முறைக்கட்டுப்பாடு குறித்து ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'மைற்ஸ்' நோயைத் தற்போது பரப்பிவரும் கிருமிகளைச் செயல் இழக்கச் செய்யும் புதிய உயிரின வகையை உருவாக்கும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேவேளை — குடாநாட்டில் கிருமிநாசினி தெளிப்பதன் மூலமாக மேற்படி நோயைக்கட்டுப்படுத்துவதற்கான பரீட்சார்த்தமான திட்டம் ஒன்றை தென்னை அபிவிருத்திச்சபை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

[க-99]

# அநாதை இல்ல பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம்

வலிகாமம்தெற்கு, ஜுலை30

கடந்த 36 வருடங்களாக வங்கிச்சேவையில் கடமையாற்றி, சுன்னாகம் இலங்கை வங்கியின் உதவி முகாமையாளராகக் கடமையாற்றி வரும் சின்னத்துரை குமாரசாமி இன்று 30 ஆம் திகதியுடன் சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.

இவருடைய சேவையைக் கௌரவிக்கும் முகமாக வங்கி ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமைக்கமைய மருதனார்மடம் கிறிஸ்தவ அநாதை இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்குத்தேவையான கற்றல் உபகரணங்களை குமாரசாமி இன்று வழங்க உள்ளார்.

(க-152)


சித்தன்கேணி

## ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்

## வரலக்ஷ்மி விரதம்

எதிர்வரும் ( 03—08—2001 ) வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் மகாலக்ஷ்மிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று விரதம் அனுட்டிப்பவர்களுக்கு வரலக்ஷ்மி பூஜையை அடுத்து நூல் வழங்கல் நிகழ்வு இடம்பெறும்.

(90594) தேவஸ்தானம்.


# எழுதுமட்டுவாழ் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜுலை 30

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கல்வி கற்று ஜி. சி. ஈ (சாதாரண) தரப்பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களின் விண்ணப்பங்கள் உடன் அனுப்பப்படவேண்டி உள்ளதால்—

வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் மேற்படி பாடசாலை மாணவர்கள் உப அதிபர் த. சோதிலிங்கத்தைச் சந்திக்குமாறும்—

வலிகாமத்தில் வதியும் மாணவர்கள் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் இயங்கும் பாடசாலையில் அதிபர் சோ. ஸ்ரீகந்தனைக் சந்திக்குமாறும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# சுன்னாகம் பங்குத்தந்தைக்கு பாராட்டு விழா

வலி. தெற்கு, ஜுலை 30

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய பங்குத்தந்தை வண. பிதா. அ. ஞானப்பிரகாசம் ஓகஸ்ட் மாதம் முதல் ஊர்காவற்றுறை மாதா ஆலய பங்குத்தந்தையாக இடம்மாறிச் செல்ல உள்ளார்.

அதனையொட்டி இம்மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சுன்னாகம் வாழ் மக்களால் தேவாலய மண்டபத்தில் பிரிவுபசார விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆசீர்வாதம் ஹென்றியின் தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண. பிதா கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மானிப்பாய் பங்குத்தந்தை வண. பெனற், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியர் வண. பிதா றொபின்சன், வலி. தெற்குப் பிரதேசசபைத் தலைவர் க. கமலசேகரன், வலி. தெற்குப் பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன். நல்லூர் பிரதேச சமூக சேவைகள் அதிகாரி சி. யோகானந்தராசா உட்படப் பலர் பாராட்டுரை வழங்க உள்ளனர்.

(க-152)

# திருட்டுப்போன மோ. சைக்கிள் யாழ். பொலீஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜுலை 30

திருடப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களை யாழ். பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

மூவர் கொண்ட கோஷ்டி ஒன்றினால் திருடப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள், ரீ.வி, டெக் மற்றும் சைக்கிள் போன்றவற்றையும் பொலீஸார் அவர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

ஓட்டோச் சாரதி உட்பட மூன்று பேரையும் பொலீஸார் கைது செய்து, விசாரணை செய்து வருகின்றனர்.

இவர்களிடம் இருந்து மேலும் பல திருட்டுக்கள் தொடர்பான உண்மைகள் வெளிவரலாம். என்றுயாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

மோட்டார்சைக்கிள்கள்மற்றும் ஏனைய பொருள்களின் உரிமையாளர்கள் தம்முடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-4-9)

# 224 பேருக்கு பரிசோதனைகள்

வலிகாமம்தெற்கு, ஜுலை30

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட கண் பார்வைப் பரிசோதனை, பல் வைத்திய ஆலோசனை ஆகிய இலவச வைத்திய முகாமின் போது மொத்தம் 224 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை மண்டபத்தில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற இம் முகாம் ஒழுங்குகளை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் ஒழுங்கு செய்திருந்தார்.

பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் பலர் கண் பார்வை, பல் பரிசோதனை ஆகியவற்றை செய்து கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை கண்பிரிவு சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி செல்வி எம். சரவணமுத்து மற்றும் றினிசொலமன் ஆகியோர் கண்பார்வை பரிசோதனைகளையும், பல்சத்திர வைத்தியர் வைத்திய கலாநிதி ஏ. ஞானமூர்த்தி பல் பரிசோதனையையும் மேற்கொண்டனர்.

(க-152)

# தீவக ஆசிரியருக்கு அழைப்பு

தோட்டப்பாடசாலைகளில் கடமையாற்றிப் பின்னர் தற்போது தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிற்கும் ஆசிரியர்களை இன்று காலை 9 மணிக்கு சகல ஆவணங்களுடனும் வேலணையில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு வேலணை கிழக்கு மகா வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார்.

(க-7)

# நெடுந்தீவு வித்தியாலயத்தில் கலை விழா

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் டி. எஸ். டி முன்னேற்ற வெளிப்படுத்துகை வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் சமூகதினமும், கலை விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், நெடுந்திவு மறறும் ஊர்காவற்றுறைப்பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் உட்பட பல பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக்கலந்துகொள்வர்.

பிற்பகல் 12.30 மணிக்கு புதிய கட்டடத் திறப்பு விழாவும், புத்துலகக் கண்காட்சியும் நடைபெறும். மாலை 6.30 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம் பெறும். (க-7)

# பட்டப்பகலில் கூரை வழியே இறங்கிய திருடன்!

யாழ்ப்பாணம், ஜுலை 30

பட்டப்பகலில் — முற்பகல் 11 மணிக்கு — வீடொன்றில் ஓடுபிரித்து இறங்கிய திருடன் ஒருவன் வீட்டுக்காரராலும், அயலவர்களாலும் மடக்கிப் பிடிக்கப்பட்டு 'உபசரிக்கப்பட்டு' பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

கல்வியங்காட்டுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டில் ஒருவரும் இல்லை என நினைத்து சுவாமி அறையில் உள்ளே இறங்கிய திருடனை வீட்டுக்காரர் அயலவர்கள் உதவியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

(க-15)


# இதய அஞ்சலி

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தின் பரம்பரை ஆஸ்தான நாதஸ்வர வித்துவானும், இசைநாதமணி, இசைச்சக்கரவர்த்தி, நாதஸ்வரகலாநிதியும் ஆகிய எங்கள் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய பெருங்கலைஞர்

## N. K. கணேசன்

அவர்களின் பிரிவுத்துயரையொட்டி எங்கள் இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

சிறப்பாக ஈழத்துச் சிதம்பரத்து மார்கழி ஆதிரைப் பெருவிழாவில் ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமானுக்கு நாதஸ்வர இசைமாரி பொழிந்து பெருமானையும், அடியவர்களையும் இசையில் திளைக்க வைத்த கலைஞனை தில்லைக் கூத்தன் தனது பாதாரவிந்தங்களில் அரவணைத்துக் கொள்ள இறைஞ்சிப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடனும், கலைஞர்களுடனும், கலை ரசிகர்களுடனும் நாமும் எங்கள் துயரைப் பகிர்ந்து கொள்ளுகிறோம்.

ஓம் சாந்தி!

ஆதீன கர்த்தாக்கள்,
ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்,
காரைநகர்.

(90598)

## உதயன்

## தடங்கல்களை நீக்கும் புனிதப் பணி!

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இனியும் தீர்வு காணத் தவறினால் நாடு சின்னாபின்னமாகிச் சீரழிந்து நாசமாகிவிடும்."

- இப்படி எச்சரித்திருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

இலங்கையில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர், நாட்டைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் தாங்கிய புரட்சிவாதிகளினால் நடத்தப்படும் வெறும் பயங்கரவாதப் போராட்டமா அல்லது ஆட்சிப் பீடத்தின் அதிகாரப் போக்கினால் அடக்கி ஒடுக்கப்பட்ட ஓர் இனம் தனது விடுதலைக்காக நடத்தும் சுதந்திரப் போராட்டமா என்பதைத் தீர்மானித்து, அதற்கேற்ப நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டது என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இனப்பிரச்சினையும், அதற்கு தீர்வு காணாததால் நாட்டில் வெடித்திருக்கும் இனப்போரும் முழுநாட்டையும் மட்டுமல்லாமல் - முழு மக்களையுமே - அவர்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் ஒட்டுமொத்தமாகவே - பாதித்து, வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத விடயமாகும்.

சில அரசியல்வாதிகளையும், ஆயுத வீற்பனைத் தரகர்களையும் தவிர, நாட்டின் ஏனைய அனைத்துத் தரப்பினரும் இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதும் உண்மையே.

இதனையும் இந்த இனப்பிரச்சினைக்குக் காரணமான அடிப்படை அம்சங்களையும் புரிந்துகொண்டு விட்டால் அதற்குத் தீர்வுகாண்பது சுலபமாகிவிடும்.

"வாழு; வாழவிடு" என்ற தாரக மந்திரத்தை பெரும்பான்மை சமூகம் எப்போது உணர்கின்றதோ அப்போதே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பிறந்துவிடும் என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும்.

அதைவிடுத்து தமது அதிகார வெறிக்காக அலையும் அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதத்துக்கும், ஆயுதப் பேரத் தரகர்களின் வலையில் வீழ்ந்திருக்கும் அரசியல்வாதிகளின் போர் வெறிக்கும் நமது சமூகம் - மக்கள் - தொடர்ந்து இடமளித்துக்கொண்டிருந்தால் இந்த நாடு, இந்த மக்கள் தொடர்ந்து அழிந்து கொண்டுதான் இருப்பார்கள்; தீர்வுக்கு வழி கிட்டவேமாட்டாது.

வெல்லமுடியாத இந்த யுத்தத்தில் பெரும்பான்மை, சிறுபான்மை சமூகங்கள் இரண்டும், சுயநல அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகத் தொடர்ந்திருந்தால் தீர்வு முயற்சியில் மக்களுக்குத் தோல்வி நிச்சயம்; ஆயுதத் தரகர்களுக்கும் அதிகார வெறி கொண்ட அரசியல்வாதிகளுக்கும் தொடர்ந்து வெற்றி உறுதி.

அதிலிருந்து விடுபடவேண்டும் என்றால் தமது ஆட்சி அதிகாரத்துக்காக மக்களைத் திசை திருப்பி, இனவாதத்தைக் கிளறி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவிடாது தடுத்து வரும் அரசியல் சக்திகளை மக்கள் தூக்கியெறியவேண்டும்.

அதற்கு -

ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு இனப்பிரச்சினையையும், தீர்வு என்ற மாயமானையும் காட்டி மக்களை ஏமாற்றி ஆட்சிக் கட்டைப் பிடித்துவைத்திருக்கும் அரசியல் வங்குரோத்துக்களையும், அவர்களுக்கு சாமரம் வீசி, எலும்புத் துண்டுகளுக்காக அலை யும் புல்லுருவிகளையும் நிராகரிக்கும் 'புனிதப் பணி'யில் மக்கள் முதலில் முழுமூச்சாக ஈடுபடவேண்டும்.

இந்தத் தடைகள் அகன்றால் தீர்வு என்ற இலக்குப் பாதையில் இருந்த தடங்கல்கள் அகற்றப்பட்டு விடும்.

### நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில்

# காலாவதியான கிருமிநாசினி விற்பனை குறித்து விவசாயிகள் முறைப்பாடு

நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதிகளிலுள்ள மருந்துக் கடைகளில் காலாவதியான கிருமிநாசினிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் முறைப்பாடுகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அப்பகுதிகளிலுள்ள விவசாய அமைப்புக்களிடம் முறையிட்டும் எந்தவிதமான பயனும் கிட்டவில்லை எனவும் -

இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளையும் நஷ்டத்தையும் எதிர்நோக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள உரவிற்பனை நிலையங்களில் உரம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் புகார் கூறப்படுகிறது. (க-4)

## வங்கிக் கணக்கு ஆரம்பித்த மாணவர்கள்

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மாவட்ட பாடசாலை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு தபாறகந்தோர் மூலமாக தேசிய சேமிப்பு வங்கியில் வங்கிக் கணக்குகளைத் திறந்துள்ளனர்.

சுமார் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இவ்வாறு புதிதாக வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துள்ளனர் என்று வித்தியாலய அதிபர் திருமதி சா.கிருஷ்ணதாஸ் அறிவித்துள்ளார்.

நெடுந்தீவு தபால்அதிபர் க.தங்கராசா தலைமையிலான தபாலக ஊழியர்கள் மாணவர்களுக்கு பணவைப்புப் புத்தகங்களை விநியோகித்தனர் எனவும் - அதிபர் அறிவித்துள்ளார். (க-7)

## நாட்டு நடப்பு

ஆசிரியரைக் கண்டால் அன்று
அஞ்சியே எடுத்தான் ஓட்டம்
ஆசிரியரைக் கண்டால் பின்னை
அருகினில் நின்றான் தம்பி
ஆசிரியருக்கு "பிறிஸ்டல்" ஒன்று
அன்பாக வேண்டித் தந்தான்
ஆசிரியரைக் கண்டு பின்னே
நெருப்பெட்டி தாருமென்றான்
ஆசிரியர் படும் அவஸ்தையெல்லாம்
அறிவாயோ நல்லூர்க் கந்தா?

*- விகடகவி -*

# சென்னை விமான நிலையத்தை படம் எடுத்த இரு சிங்கள இளைஞர்கள் கைதாகினர்!

சென்னை,ஜூலை30

சென்னை சர்வதேச விமான நிலையத்தை வீடியோப் படம் எடுத்த இரு சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை இந்த இளைஞர்கள் சுற்றிச் சுற்றி படம் எடுத்திருந்தனர் என்றும் விமானங்கள் தரிப்பிடம் மற்றும் முக்கிய கட்டடங்களை அவர்கள் படம் பிடித்திருந்தனர் என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

இவர்களின நடவடிக்கை குறித்து விமான நிலைய அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டு பொலீஸாருக்கு அறிவித்தனர். அதைத் தொடர்ந்தே பொலீஸார் இளைஞர்கள் இருவரையும் கைது செய்தனர்.

விமான நிலையத்தை குண்டு வைத்துத் தகர்க்க எடுக்கப்பட்ட சதி முயற்சியா என்ற கோணத்தில் பொலீஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

புத்த பிக்குகள் இலங்கையில் இருந்து வர உள்ளனர் என்றும் அதற்கு முன்னோடியாக விமான நிலையம் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ள வீடியோ படம் எடுத்தோம் என்றும் இந்த இரு இளைஞர்களும் தெரிவித்திருந்தனர். இவர்கள் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை நன்கு பேசுகிறார்கள். அவர்கள் கூறியுள்ள சில தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக இருந்ததால் பொலீஸார் சந்தேகத்துடன் துருவித்துருவி விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கொழும்பு விமானத் தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி ஏராளமான விமானங்களை அழித்ததற்கு பழிவாங்குவதற்காக சிங்களத் தீவிரவாதிகள் அனுப்பு சென்னை விமான நிலையத்தை குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டமிட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடங்கள் மீளாய்வு

மூளாய்,ஜூலை30

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு யாழ் குடாநாட்டிலுள்ள வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடங்கள் குறித்து மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் சிரமமின்றி சென்று வாக்களிக்கக் கூடிய விதத்தில் அனைத்து வாக்களிப்பு நிலையங்களும் ஒழுங்கு செய்யப்படவுள்ளன. இவ்விடயம் குறித்து பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் அபிப்பிராயங்களும் கவனத்தில் எடுக்கப்படவுள்ளன. இவ்விடயம் தொடர்பாக சகல பிரதேச செயலகங்களுக்கும் யாழ். அரச அதிபர் சுற்றறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளார். (ம-99)

### குடிகாரக் கணவனைத் திருத்த

# குழந்தையுடன் கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருந்த மனைவி!

கொழும்பு,ஜூலை30

குடும்பத்தைச் சீரழிக்கும் கணவனின் குடிப்பழக்கத்தை ஒழிக்க, தனது கைக்குழந்தையுடன் வீட்டுக் கூரை மீது ஏறிநின்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய சம்பவம் வத்தளை ஹெந்தலையில் இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட கணவன் கூலி வேலை செய்பவர். தினமும் கூலி வேலையில் கிடைக்கும் சொற்ப பணத்தையும், குடித்து அழித்து விட்டு வெறுங்கையுடன் வீடு திரும்புவதே அவரது வாடிக்கை.

இதனால் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. மனைவி, தமது கஷ்ட நிலையை எடுத்துக்கூறி, அன்பாக புத்திமதிகள் பல கூறிய போதும், அப்போதைக்கு தலையாட்டி விட்டு, மறுநாள் நிறை வெறியில் தள்ளாடியபடி அந்தக் கணவர் வருவாராம்.

இதனால் வேறு வழியின்றி கூரையில் ஏறி போராட்டம் நடத்தினார் மனைவி.

அவரைக் குழந்தையுடன் கீழே இறங்கும் படியும், தான் இனிமேல் குடிக்கமாட்டேன் என்றும் கணவர் கூறிய போதும், "குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு" என்று கூறிய மனைவி, "இனிமேல் குடிக்க மாட்டேன்" என்று கணவன் அயலவர்களின் சாட்சியங்களுடன் கடிதம் எழுதிக் கொடுத்த பிறகே, கைக் குழந்தையுடன் கீழே இறங்கினார். (ஓ)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக இதுவரை 12 மனுக்கள் தாக்கல்!

எதிர்வரும் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் -

-உள்ளூராட்சி சபைத்தேர்தல்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை சர்வஜன வாக்கெடுப்புக்கும் செலவு செய்வதற்கு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் -

கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் இதுவரை 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி., ரெலோ ஆகிய அரசியல் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகளின் சார்பில் 7 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தனிப்பட்ட வாக்காளர்களின் சார்பில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ம-6)

## 3 படையினரும் தொடர்ந்து விளக்கமறியலில்

அல்லாரையில் அண்மையில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று படையினரும் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதேவேளை பொலீஸ் நீதிமன்ற விசாரணைகளுக்குப் புறம்பாக படையினரும் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. (க-117)

## நாளை

ஆடி 15
செவ்வாய்க்கிழமை
திதி: ஏகாதசி
காலை 07.05 வரை.
நட்சத்திரம் : கேட்டை
பிற்பகல் 3.04 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தனித்திருக்கும் உன் நண்பனைத் திருத்து! மக்களிடையில் வைத்து அவனைப் பாராட்டு.

### யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள

# சுவாமி தந்திரதேவா இன்று பங்குபற்றும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க நாட்டு இந்துசமயத் துறவி ஸ்ரீமத் தந்திரதேவா மஹாராஜ் இன்று உடுவில், சுன்னாகம், சங்கானை, சித்தன்கேணி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெறும் சமய நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

காலை 8.30 மணிக்கு உடுவில் கல்விக் கோட்டச் சமூகத்தின் ஏற்பாட்டில் இராமநாதன் கல்லூரியில் சுவாமிக்கு வரவேற்பு இடம்பெறும். அங்கு சுவாமிஜி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து காலை 10 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், நண்பகல் 12 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும், பிற்பகல் 1.30 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்திலும், பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் சுவாமிஜிக்கு வரவேற்று அளிக்கப்படும்.

மாலை 4.30 மணியளவில் திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தில் சைவச் சிறுவர் இல்லத்தினரால் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்படும். அவர் அங்கு சிறப்புச் சொற்பொழிவும் வழங்குவார். (க-7)

## வலி.மேற்கில் முதலாவது கலைவிழா

வலிகாமம் மேற்கு கலாசார பேரவையின் இவ்வாண்டுக்கான முதலாவது கலைவிழா எதிர்வரும் 3ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான கலைவிழாக்களை பிரதேச ரீதியாக நடத்துவதற்கு மேற்படி கலாசாரப் பேரவை தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாவது கலைவிழா அராலியில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலி. மேற்குக் கலாசாரப் பேரவை செய்து வருகின்றது.

பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்வுகள் உட்பட பல் கலை அம்சங்களையும் கொண்டதாக மேற்படி கலைவிழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-99)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

கேடில்லை யுத்த வெடிபொருளை நெருங்காதிருப்பின்
ஆபத்தானவை அதனை தீண்டும் செயல்கள்.



# வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண பொது எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் சேவைகளின் வகுப்பு II பிரிவு "ஆ" பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2001

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள மாகாண பொது எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் சேவைகளின் வகுப்பு II பிரிவு 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குக் கீழ்க் குறிப்பிட்ட தகைமையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2001.08.27 ஆகும். மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது அம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

02.

| பதவிக்கான குறியீட்டு இலக்கம் | பதவிப் பெயர் |
|---|---|
| 01 | மாகாண பொதுச் சேவையின் எழுதுநர் சேவை |
| 02 | மாகாண பொதுச் சேவையின் கணக்குப்பதியுநர் சேவை |
| 03 | மாகாண பொதுச் சேவையின் பண்டகசாலைக் காப்பாளர் சேவை |

2\. 1. விருப்புரிமை:-
ஒரு விண்ணப்பதாரர் மாகாண பொதுச் சேவையின் மூன்று பதவிகளுக்காக விருப்பம் தெரிவிக்கலாம். தங்களின் விருப்பத்தை ஒழுங்குமுறையில் விண்ணப்பத்தில் சம்பந்தப்பட்ட கூட்டினுள் பதவிக்குரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் தெரிவிக்க வேண்டும். (விண்ணப்பத்தில் 10ஆவது கூட்டைப் பூர்த்தி செய்யவும்)

2\. 2. விண்ணப்பதாரிகள் யாவரும் தாம் விருப்பம் தெரிவித்துள்ள சேவை மற்றும் பதவிக்காக வேண்டிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் விண்ணப்பத்தில் குறிப்பிடும் விருப்பங்களை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

03.சேவைக்கான நிபந்தனைகள்:-
1. இப்பதவி நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுத் தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்கள்.
2. இது ஓர் இடமாற்றச் சேவையாகும். இவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கடமைப்பட்டவர்களாவர்.
3. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் மாகாணப் பொது எழுதுநர் சேவைக்கு நியமிககப்படும் பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள் தட்டெழுத்துப பரீட்சையிலும், கணனிப் பரீட்சையிலும் சித்திபெறுதல் வேண்டும்.

04.சம்பள அளவுத் திட்டம்:
பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (III) இன் படி
ரூபா 47,880 - 14 X 1,320 - 6 X 1,550 - 75,720/= (T-2-1) வழங்கப்படும்.

05.தகைமைகள்:
அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் இருப்பவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல)
ஈ. பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் அம்மாவட்டத்தில் பிறந்தவராதல் வேண்டும். இல்லாவிடின் பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய திகதிக்கு உடன் முந்திய ஆறு வருட (06) காலத்தில் குறைந்த பட்சம 03 வருடங்களாவது அவர் அம்மாவட்டத்தில தொடர்ச்சியாகவும், நிரந்தரமாகவும் வசிப்பவராதல் வேண்டும். இல்லாவிடின் அவா தொடர்ந்து 05 வருட காலங்கள் அம்மாவட்டத்தில் இரண்டாம்நிலைப் படிப்பை மேற்கொண்டிருக்க வேண்டும்.
உ. விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் மாற்றத்தகு மாகாண/உள்ளூராட்சி/ அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் பணியாற்றுபவராயிருப்பின் விண்ணப்பதாரி தனது பிறப்பிடத்தையோ அல்லது தந்தை அல்லது தாயினது பிறப்பிடத்தையோ அவர் சேர்ந்த மாவட்டமாகத் தெரிவுசெய்ய அனுமதிக்கப்படுவார்.

*குறிப்பு:*
வடக்கு - கிழக்கு மாகாணத்தினைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வசிப்போரும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாகக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. இதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும ஆவணமும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

06.கல்வித் தகைமைகள்:
6.1. எழுதுநர், பண்டகசாலைக் காப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் சான்றிதழ்களில் ஆகக் குறைந்தது ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும்.
6.1.1. சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (i) சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், (ii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஓர் அமர்வில்(05) ஐந்துக்குக் குறையாத பாடங்களுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி.
6.1.2. க.பொ.த. (சா/த) பரீட்சையில் (i) சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், (ii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்பகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஓர் அமர்வில் (05)ஐந்துக்குக் குறையாத பாடங்களுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது (06) ஆறு பாடங்களில் சித்தி.
6.1.3 தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் அடங்கலாக 04 பாடங்களில் 'ஏ அல்லது பீ' தரச்சித்திகளுடன் எஞ்சிய பாடங்களில் 'சீ' தரச்சித்தியுட்பட ஒரே தடவையில் 05 பாடங்களுக்கு குறையாமல் இரு தடவைகளுக்கு மேற்படாமல் 06 பாடங்களில் சித்தி.
6.1.4. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம்.

*குறிப்பு:* பொதுக் கல்விச் சான்றிதழ் (உ/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழிப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருப்பின் பொ.க.சா. (சா/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருப்பதாகக் கருதப்படும்.

6.2. கணக்குப் பதியுநர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் சான்றிதழ்களில் ஆகக் குறைந்தது ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும்.
6.2.1. இலங்கை சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (i) சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், (ii) கணக்குப்பதிதல் அல்லது கணக்கீட்டியல் அல்லது வர்த்தகமும் கணக்கியலும், (iii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) திறமைசசித்திகளுடன் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களுக்குக் குறையாமல் ஆறு(06) பாடங்களில் சித்தி.
6.2.2. க.பொ.த. (சா/த) பரீட்சையில் (i) சிங்களம்/தமிழ்மொழி அல்லது இலக்கியம், (ii) கணக்குப்பதிதல் அல்லது கணக்கீட்டியல் அல்லது வர்த்தகமும் கணக்கியலும் (iii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்பகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் (05)ஐந்து பாடங்களுக்குக் குறையாமல் (06) ஆறு பாடங்களில் சித்தி.
6.2.3 தேசிய பொதுக் கல்விச் சன்றிதழ் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் 'ஏ' அல்லது 'பி' தரச்சிததியும் எஞ்சிய பாடங்களில் 'சீ' தரச்சித்தியுட்பட ஒரே தடவையில் (05) ஐந்து பாடங்களுக்குக் குறையாமல் ஆறு (06) பாடங்களில் சித்தி.
6.2.4 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வர்த்தகச் சான்றிதழ்.
6.2.5 அரசாங்க கனிஷ்ட பல்கலைக்கழகம்மொன்றில் கணக்குப் பதிதலில் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது கணக்குப்பதிதலை ஒரு பாடமாகக் கொண்ட கணக்குப் பரிசோதனைப் பயிற்சி, ஆகு செலவு பதிப்பிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ்.
6.2.6 இலண்டன் கணக்குப் பதியுநர் நிறுவக இறு[illegible]ச் சான்றிதழ்.
6.2.7 இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் டிப்ளோமா இடைநிலைப் பரீட்சைச் சான்றிதழ்.
6.2.8 இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் நான்கு வருட உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியில் இரண்டாம் வருட இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்திய சான்றிதழ்.
6.2.9 இலண்டன் பட்டயச் செயலாளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சைச் சான்றிதழ்.
6.2.10. இலண்டன் ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் பகுதி I பரீட்சைச் சான்றிதழ்.
6.2.11. இலண்டன் சான்றுப்படுத்திய கூட்டுக்கணக்காளர் சங்கத்தின் பகுதி I பரீட்சைச் சான்றிதழ்.
6.2.12. உயர் கல்வி அமைச்சின் கீழ் அடங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளினால் வழங்கப்பட்ட கணக்குப் பதியுநர்களுக்கான சான்றிதழ் அல்லது உயர் வர்த்தகச் சான்றிதழ்.
6.2.13. இலண்டன் வர்த்தகச் சபையின் இலங்கைத் திட்டத்தைச் சேர்ந்த வர்த்தகப் படிப்பு (சாதாரண வர்த்தகப் பிரிவு) அல்லது உயர் வர்த்தகப்படிப்புச் (சாதாரண வர்த்தகப பிரிவு) சான்றிதழ்.
6.2.14. இலங்கை வர்த்தகச் சபை மற்றும் கல்வித் திணைக்களம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட வர்த்தகப் படிப்புச் சான்றிதழ் (சாதாரண வர்த்தப் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தகப் படிப்புச் சான்றிதழ் (சாதாரண வர்த்தகப் பிரிவு).
6.2.15. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்ளோமா இடைநிலைச் சான்றிதழ்.
6.2.16. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் நான்கு வருட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமாக் கல்விநெறியின் இரண்டாம் ஆண்டுச் சான்றிதழ்.
6.2.17. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் இரண்டு வருட வர்த்தகப் படிப்புத்துறை தேசிய டிப்ளோமாக் கல்வி நெறியின் சித்திபெற்ற சான்றிதழ்.
6.2.18. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் தொழிற் கல்விச் சான்றிதழ்.
6.2.19. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் நிதிக் கணக்கீட்டியலுடன் கூடிய வணிக நிதித்துறையிலான இரண்டு வருட தேசிய டிப்ளோமாக் கல்வி நெறியில் சித்தி எய்தி இருத்தல்.
6.2.20. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் துறையிலான இரண்டு வருட தேசியச் சான்றிதழ் கல்வி நெறியில் சித்தி எய்தி இருத்தல்.
6.2.21. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்ற பட்டம்.

*குறிப்பு :-*
(i)கல்விப் பொதுக் தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்தியெய்தி இருப்பதானது இலங்கை சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண) பரீட்சையில் கணக்குப் பதிதல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றதாகக் கணிக்கப்படும்.
(ii) கல்வி பொதுக் தராதரப் பத்திர (உயர் தரம்)பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியெய்தி இருப்பதானது க.பொ.த (சா/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றதற்குச் சமனானதாகக் கருதப்படும்.

6.3 இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. பரீட்சைத் திட்டம்:-
மொழியாற்றல், உளச்சார்பு எனும் இரண்டு பாடங்களுக்கு விண்ணப்பதாரிகள் யாவரும் தோற்றவேண்டியதுடன், கணக்குப் பதியுநர் பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அப் பாடங்களுக்கு மேலதிகமாக கணக்குப் பதிதல் பற்றிய வினாப்பத்திரம் ஒன்றுக்கும் தோற்ற வேண்டும்.

08.மொழி மூலம்:-
இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும்.

09.பாடத்திட்டம்:-
9.1 மொழிஆற்றல்: (100 புள்ளிகள்)
1 1/2 மணித்தியால விடய ஆய்வு சுருக்கமான வினாத்தாள் ஒன்று கருத்துக்களை தெரிவிப்பதற்குரிய மொழியறிவு, கிரகித்தற் திறமை, எளிய இலக்கணம் ஆகியவற்றை சோதிப்பதற்கென வடிவமைத்த வினாக்களைக் கொண்டிருக்கும்.
9.2 உளச்சார்புப் பரீட்சை: (100 புள்ளிகள்)
ஒரு மணித்தியால விடய ஆய்வு வினாத்தாள் ஒன்று கூட்டு எண்கள், சொல்லமைப்புத் திறன், பொது விவேகம் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.
9.3 கணக்குப் பதிதல்: (100 புள்ளிகள்)
பொதுக் கல்விச் சான்றிதழ்(சாதாரண) தரத்தில் அமைந்த 1 1/2 மணித்தியால வினாத்தாள் ஒன்று, கூட்டல் எண்கள் அடங்கலாக எண்கணிதம், கணக்குப் பதிதல அடிப்படை அறிவு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
9.4 தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளி மட்டம் குறைந்த பட்சம் 40 சதவீதமாவது ஆதல் வேண்டும்.

10.ஆள்சேர்ப்பு முறை:-
(i) அங்கீகரிக்கப்பட்ட ஆளசேர்ப்புத் திட்டம் அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் இவ் அறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எனினும் இந் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள வழங்கப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.
(ii) நிலவும் வெற்றிடங்களில் 3 வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சைல் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில கூடிய புள்ளி மட்டத்தை அடைகின்ற 3 வீதமானவர்கள் நியமனம் வழங்குவதற்காகத் தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளன் புள்ளிகள் குறைந்த பட்சம் 40 சதவீதமாவது ஆதல் வேண்டும். நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி ஒருவர் தனது வலது குறைந்த நிலையையும், சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் மருத்துவ நிபுணர் ஒருவரின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

11. பிழையான தகவல் வழங்குவதற்குரிய தண்டனை:-
விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களில் சரியான விவரங்களைச் சேர்த்துக்கொள்வதில் மிகக்கவனம் செலுத்துதல் வேண்டும். இப் பரீட்சையின் விதிகள், ஒழுங்கு விதிகளின் படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எந்த ஒரு பரீட்சார்த்தியாவது தகுதியற்றவரென அறியப்படின் பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியால் தரப்பட்ட விவரங்கள் தவறானவை என்றோ அல்லது அவர் வேண்டுமென்று உண்மையை மறைத்துள்ளாரென்றோ அறியப்படின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. பரீட்சைக் கட்டணம்:-
விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சட்டினை விண்ணப்பபடிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

(C/17607)

# உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புலிகள் ஊடுருவியது எப்படி?



கொழும்புக்கு வடக்கே மிகவும் அதி உச்சப் பாதுகாப்பில் வைக்கப் பட்டிருந்த கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீதும், அருகில் இருந்த பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீதும் விடுதலைப் புலிகள் கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை மூர்க்கத்தனமான அதிர டித் தாக்குதலை மேற்கொண்டு அர சுக்கு 4 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான இழப்புக்களை ஏற்படுத்தி யுள்ளனர்.

மிகவும் துணிகரமான - ஊடுரு வற் பாணியில் அமைந்த - இத்தாக் குதல் நடந்தேறிய விதம் குறித்து இராணுவ பாதுகாப்பு ஆய்வாளர்கள் மூக்கில் விரலை வைக்கின்றனர்.

இந்தப் பாணியிலான தாக்குதல் கள் உலக யுத்த வரலாற்றில் மிக வும் அரிதாகவே நடைபெறுகின்றன. நடைபெற்ற தாக்குதல்களில் பல போதுமான இலக்கை அடையவு மில்லை.

1960ஆம் ஆண்டு வியட்நாமில் பிலீக்கு (Vietnam - pleiku) மற்றும் பாங்சான் (Fang shan) ஆகிய இடங் களில் இருந்த அமெரிக்க விமானப் படைத்தளங்கள் இதே போன்றதொரு திடீர்த் தாக்குதல் மூலம் வியட்நாமி யர்களால் துடைத்தெறியப்பட்டன.

தற்போது ஈழப்போராட்ட வரலாற் றில் மட்டுமன்றி உலகப் போராட்ட வரலாற்றிலும் இடம்பெறும் வகையில் புலிகள் இயக்கத்தின் மற்றுமொரு யுத்த சாதனையாக இத்தாக்குதல் விளங்குகின்றது. (ஏற்கனவே தற் கொலைப் படைகளை அதிகளவில் கொண்ட அணியாக விடுதலைப் புலி கள் இயக்கம் திகழ்கின்றது.

புலிகள் விமானத் தளங்களைத் தாக்குவது இதுதான் முதற்தடவை யல்ல.

இவ்வாறான ஊடறுப்புத் தாக்கு தல்களை அவர்கள் பலாலி விமானத் தளத்தினுள்ளும், திருமலை சீனன் குடா விமானத்தளம் மீதும் மேற் கொண்டுள்ளனர். எனினும் பெரும் பான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் - அதி உச்ச பாதுகாப்பு வலயத்தில் - கறுப்பு ஜூலையை முன் னிட்டு தேசிய பந்தோபஸ்து ஏற்பாடு கள் மேலும் பலப்படுத்தப்பட்டிருந்த வேளையில் - இத்தகைய தாக்குத லைப் புலிகள் வெற்றிகரமாக மேற் கொண்டமை இராணுவ ஜாம்பவான் களையே வியப்பில் ஆழ்த்திவிட்டது.

## தாக்குதல் அணியின் பயணம்

தாக்குதலை நடத்துவதற்காக சாரதி உட்பட சுமார் 15பேர் கொண்ட அணி பிறவுண் மற்றும் வெள்ளை நிறமான 'றோசா ஜேர்ணி' (Rosa Journey) எனும் குளிரூட்டப்பட்ட மினி பஸ்ஸில் பெயர் குறிப்பிடப்படாத இடத்திலிருந்து புறப்பட்டது. இரவு 9.30 மணிக்கு கட்டுநாயக்கா தளத் திலிருந்து சுமார் 2.5 கிலோமீற்றர் தூரத்திற்கும் அப்பாலுள்ள 'குரண ராஜ் பெர்னாண்டோ' மைதானத்தில் வந்திறங்கியது.




தலைநகரில் தற்போது வழக்க மாக இரவில் அமுல் செய்யப்படும் மின்வெட்டு நேரம் வரும்வரை அங் கேயே காத்து நின்றனர். இந்நேரம் அவர்கள் தமது இறுதி நேர உப சாரங்களில் ஈடுபட்டனர்.

மின்வெட்டு அமுலுக்கு வந்ததும் விமான நிலையத்தை நோக்கிப் புறப் பட்டனர். அச்சமயம் இவர்கள் அனை வரும் இராணுவம் மற்றும் விசேட கொமாண்டோ படையணிகள் பயன் படுத்தும் சாம்பல் நிறமான சீருடை களை அணிந்திருந்ததாகக் கூறப்படு கிறது.

விமானப் படைத் தளத்திற்கான பிரதான நுழைவாயில் கொழும்பிலி ருந்து நீர்கொழும்பு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது. அவ்வீதி யிலிருந்து திரும்பி கிழக்காகச் செல் லும் பாதையிலேயே சர்வதேச விமான நிலைய நுழைவாயில் அமைந்துள் ளது. இரண்டிற்கும் அருகருகே இரண்டு ஓடுபாதைகள் உள்ளன.

விமானப் படைத் தளத்தில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் 9 பேர் கொண்ட பெரிய அணியாகவும், ஐந்து பேர் கொண்ட சிறிய அணியா கவும் பிரிந்து கொண்டனர்.

### அகழி வழியே ஊடுருவினர்

பெரிய அணியினர் அதிகாலை 3 மணிக்கு விமானப் படைத் தளத் தின் பின்புறமாக - பொல்வத்தைப் பகுதியூடாக - பாதுகாப்பு வேலிகளை வெட்டிக்கொண்டு உள்ளே நுழைந் துள்ளனர்.

இதேவேளை சிறிய அணியினர் கொழும்பு - நீர்கொழும்பு வீதியிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கிச் செல்லும் குராணைச் சந் திக்கு அருகாமையிலுள்ள அகழி ஒன்றி னூடாக முன்னேறி விமானப்படைத் தளத்தின் முகப்பை அணிமித்தனர். இவர்கள் தமக்குரிய சமிக்ஞை கிடைக்கும்வரை காத்திருந்தனர்.

குராணைச் சந்தியில் இருந்த பொலீஸ் காவலரண் முதல் நாள் இரவு அதாவது 23ஆம் திகதி திங் கட்கிழமை இரவு 100 மீற்றர் பின் புறமாக நகர்த்தப்பட்டிருந்தது. முத லில் காவலரண் அமைந்திருந்த இடத் திற்கு அருகிலேயே இந்த அகழி (கால்வாய்) காணப்படுகின்றது. காவ லரண் நகர்த்தப்பட்டது தற்செயலாக நிகழ்ந்ததா அல்லது வேறு ஏதும் பின்னணியில் செய்யப்பட்ட ஏற்பாடா என்பது விசாரணைக்குரியது.

உள்ளே நுழைந்த பெரிய அணி யினர் புற்பற்றைகள் நிறைந்த கதி ரான பகுதியூடாக மெதுவாக முன் னேறி விமானத் தளத்தினை நெருங் கினர்.

காலை 3.15 மணியளவில் தாம் அண்மித்து விட்டமைக்கு சமிக்ஞை யாக சில வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் விமான நிலையத்தில் படை யினரிடையே சிறிய குழப்பநிலை தோன்றியதாயினும், அதனை அவர் கள் பாரதூரமாகக் கருதவில்லை.

சரியாக 3.30 மணிக்கு முகப்பில் மறைந்திருந்த புலிகள் அங்கு காவ லில் இருந்த படையினர் மீது தாக் குதலைத் தொடங்கினர்.

அங்கு தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்க உள்ளிருந்த படையி னர் முகப்புப் பகுதிக்கு வந்தனர். இச் சமயத்தில் உள் நுழைந்த சில புலி கள் முகாமிற்கான மின் விநியோகத் தைத் துண்டித்தனர்.

இதனால் விமானப் படைத்தளத் தின் ஓடு பாதைகள் உட்பட முகாமின் பெரும்பகுதி இருளில் மூழ்கியது.

காலை 3.50 மணிக்கு பின்புறமாக நுழைந்த அணி இருளைப் பயன்படுத் திக் கொண்டு விமான ஓடு தளத்தில் பிரவேசித்தது. றொக்கட் லோஞ்சர் கள் மூலம் விமானங்களைத் தகர்த்த படி அவர்கள் ஓடு பாதையில் முன் னேறினர். இதன்போது விமான நிலையக் காவலாளி ரி.ஆர்.மொஹமட் என்பவர் காயமடைந்தார்.

விமானங்கள் தகர்க்கப்பட்டுக் கொண்டிருந்தபோதுதான் அங்கு நடப் பவற்றைப் படையினரால் ஓரளவுக் கேனும் ஊகிக்க முடிந்தது. உடனடி யாக மேலதிக படையினர் அவ்விடத் திற்கு அழைக்கப்பட்டனர்.

இதற்கிடையில் புலிகள் இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர்' ரக 'ஜெட்' குண்டு வீச்சு விமானங்கள் இரண்டையும், ரஷ்யத் தயாரிப்பு 'மிக் 27' ரக ஜெட் குண்டுவீச்சு விமானத்தையும், ரஷ் யத் தயாரிப்புப் பீரங்கிகள் பொருத் தப்பட்ட 'எம்.ஐ.17' ரக ஹெலிகொப் டர்கள் இரண்டையும், பாகிஸ்தான் - சீன கூட்டுத் தயாரிப்பான 'கே-8' ரக பயிற்சி ஜெட் விமானங்கள் மூன் றையும் முற்றாகத் தகர்த்து விட்டு சர்வ தேச விமான நிலையத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தனர். இத் தாக்குதலின்போது விமான நிலையத் தில் பணி புரியும் ரஷ்யப் பொறியி யலாளர் அலெக்ஷ் காயமடைந்தார்.

இத் தாக்குதலின் முடிவில் ஒரு கிபிர் விமானத்தின் பிற்பகுதி மட்டும் எஞ்சியிருந்தது. ஹெலி எரிந்து சாம்ப லாகியது. இச்சண்டையில் புலிக ளின் இரு உறுப்பினர்கள் விமான ஓடு தளத்தில் வைத்து சுட்டுக் கொல் லப்பட்டனர்.

சர்வதேச விமானத் தளத்தினுள் நுழைந்த புலிகள் அந்த வேகத்தி லேயே அங்கு நின்ற சரக்கு விமா னங்களைத் தாக்கத் தொடங்கினர். இத்தாக்குதலில் மூன்று விமானங்கள் சேதமடைந்தன.

## உலக யுத்த வரலாற்றில் பதிவான கட்டுநாயக்கா அதிரடித் தாக்குதல்

தொடர்ந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் 'ஏயர் பஸ்' ரக விமானங் களை குண்டுகள் மூலம் வெடிக்க வைத்துத் தகர்த்தனர். இதில் மூன்று விமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

### கட்டுப்பாட்டுக் கோபுரத்தில் புலிகள்

மூன்று புலிகள் கட்டுப்பாட்டுக் கோபுரப் பகுதிக்குள் ஏறிநின்று றொக்கட் லோஞ்சர்கள் மூலம் தாறு மாறாக விமானங்களைத் தாக்கத் தொடங்கினர். இதில் மூன்று விமானங் கள் பலத்த சேதமடைந்தன. அங்கு ஏறிநின்ற புலிகள் தமது துப்பாக்கிக ளின ரவைகள் தீரும் வரை தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

இதே சமயம் மற்றுமொரு புலி வீரர் விமான நிலைய 'ட்ரான்ஸிட்' பகுதியில் தீ வைக்க முற்பட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொருள்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் நுழைந்த ஒரு போராளி அங்கி ருந்து தாக்குதல் நடத்திக் கொண்டி ருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களில் ஓடு தளத்தில் வைத்து 4 புலிகள் கொல் லப்பட்டனர்.

காலை 7.45 மணிக்கு விமானப் படை கொமாண்டோக்கள் கட்டுப் பாட்டுக் கோபுரத்தில் நின்று தாக் குதல் நடத்திய இரு புலிகளைச் சுட் டுக் கொன்றனர். மற்றவர் குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

**தொகுப்பு:-ராஜபுத்திரன்**

### எண்ணெய்த் தாங்கிகள் சிதறின

நேரம் காலை 8.30 மணி ஆகிக் கொண்டிருந்தது. விமானத்திற்கு எரிபொருள் வழங்கும் எண்ணெய் தாங்கிகள் சில தகர்க்கப்பட்டன. மறைந்திருந்த புலிவீரர் ஒருவர் வெளிப்பட்டு கொமண்டோ படையணி மீது தாக்குதல் நடத்தினார். தொடர்ந்து அவரும் வெடித்துச் சித றினார். இத்தாக்குதலினால் மூன்று எண்ணெய்த் தாங்கிகள் முற்றாகத் தகர்க்கப்பட்டன.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட சில நிமிட நேரங்களிலேயே சர்வதேச விமான நிலைய ஓடு தளத்தில் நின்ற விமானத்தில் லண்டன் புறப்பட தயா ராக இருந்த பயணிகள் அனைவரும் உடனடியாக இறக்கப்பட்டு விமான நிலையத்திற்குள் கொண்டு செல்லப் பட்டனர்.



சம்பவத்தை கேள்வியுற்ற செய் தியாளர்கள் விமான நிலையத்தை நோக்கிப் படையெடுத்துக் கொண்டி ருந்தனர்.

இதேநேரம் கட்டுநாயக்காவில் இருந்து ஏனைய சர்வதேச விமான நிலையங்களுக்கு எந்த ஒரு விமா னமும் இங்கு தரையிறங்குவதற்காக வருகைதர வேண்டாம் என்று அவ சர அறிவுறுத்தல்கள் பறந்து கொண் டிருந்தன. கட்டுநாயக்கா நோக்கி வந்து கொண்டிருந்த, வரவிருந்த விமானங்கள் பல்வேறு நாடுகளுக் குத் திருப்பப்பட்டன.

ஆஸ்திரேலியாவின் சிட்னியிலி ருந்து புறப்பட்ட 'யு.எல்.679', சவூதி யின் றியாட்டில் இருந்து 'யு.எல். 266', இத்தாலியின் றோமிலிருந்து மிலான் ஊடாகப் புறப்பட்ட 'யு.எல். 582' ஆகிய மூன்று விமானங்களும் சென்னையில் தரையிறக்கப்பட்டன. இவற்றில் இருந்த சுமார் 1005 பய ணிகளும் விசேட பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு ஹோட் டல்களில் தங்க வைக்கப்பட்டனர்.

லண்டனிலிருந்து புறப்பட்ட 'யுஎல் 506' விமானம் டுபாய்க்கும் ஜேர்மனின் பேர்ளினிலிருந்து டுபாய் ஊடாகப் புறப்பட்ட 'யு.எல்.556' விமானம் திருவ னந்தபுரத்திற்கும், அபுதாபி மஸ் கட்டிலிருந்து டுபாய் ஊடாகப் புறப் பட்ட 'யு.எல்.210' விமானம் டோஹா வுக்கும் திருப்பியனுப்பப்பட்டன.

செய்திகளைச் சேகரிக்க கட்டு நாயக்கா விரைந்த செய்தியாளர்கள் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட வில்லை. எனினும் அவர்களில் சிலர் எப்படியோ உள்நுழைந்து சம்பவங் களை நேரடி ஒலி, ஒளிபரப்புச் செய்து கொண்டிருந்தனர். இதன போது ரூபவாஹினி செய்தியாளர் மாலித சேனரத்ன சண்டையின் இடையே அகப்பட்டுக் காயமடைந்தார்.

இத்தாக்குதல்களினால் விமான நிலையத்தில் இருந்த உள்ளூர், வெளி யூர் பயணிகள் நலாபக்கமும் பாது காப்பான இடங்களைத்தேடி சிதறி ஓடினர். பயணிகள் விடயத்தில் விமான நிலைய அதிகாரிகள் எடுத்த நடவ டிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் பிரஜை சியான் ஹில் பின்வருமாறு கூறுகிறார்:-

"இலங்கைப் படையினரும் விமான நிலைய ஊழியர்களும் மிகவும் சுறு சுறுப்பாகத் தமது உயிர்களைக் காப் பாற்றும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட் டுக் கொண்டிருந்தனர்" என்கின்றார் அவர்.

வழமைபோல் புலிகளின் இந் தத் தாக்குதலை இந்தியா, அமெ ரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகள் கண்டித்துள்ளன. பொதுமக் களின் பாதுகாப்புப் பற்றித் தாக்குதல் நடத்தியவர்கள் கவனத்தில் கொள்ள வில்லை என்பதை இந்தத் தாக் குதல்கள் எடுத்துக் காட்டுவதாகவும் அவை கூறுகின்றன.

### பயணிகளை பாதுகாத்த புலிகள்

பயணிகள் உயிருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து சில விடயங் களை உற்று நோக்கலாம்.

இந்தத் தாக்குதலின் போது எந்த ஒரு பயணியும் கொல்லப்பட வில்லை. விமான நிலையத்திற்குள் (ஜன்னல் கண்ணாடிகள் உடைந் ததைத் தவிர) எந்த ஒரு சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. அத்துடன் தாக்குதலுக்கு சற்று முன்னரே அவ் விடத்தில் சிங்கப்பூர் விமானம் ஒன்று தரித்து நின்றது. அது புறப்படும் வரை புலிகள் காத்து நின்றனரா?

மேலும் முதலில் புலிகள் விமா னப்படை விமானங்களையே தாக்கி யுள்ளனர். பின்னரே சர்வதேச விமான நிலையத்தினுள் புகுந்தனர். இதன் மூலம் அவர்கள் பயணிகள் பாது காப்பாகத் தப்பிச் செல்ல வாய்ப்ப ளித்தனரா?

தாக்குதல் நடைபெற்ற பின்னர் லண்டன் செல்லத் தயாராக நின்ற பயணிகளின் விமானம் முற்றாக நாசமாகியிருந்தது. அங்கு பயணிக ளின் பெருமளவிலான சாறிகள் மற் றும் உடைகள், வீடியோ நாடாக் கள், இசைத் தட்டுகள் உட்பட பல்வேறுபட்ட பொருள்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன.

தாக்குதல் நடைபெற்ற இடத் துக்கு அருகில் நின்ற வெளிநாட்டுத் தனியார் சரக்கு விமானங்கள் மூன்று இத்தாக்குதலில் இருந்து தப்பியுள் ளன. இதன்போது எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் ஆறும் அதிர்ஷ் டவசமாகத் தப்பிக்கொண்டன. ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் வசம் இருந்த 12 விமா னங்களில் ஏனைய 6 விமானங்கள் வெளிநாடுகளில் இருந்ததால் தப் பித்துக் கொண்டன.

ஸ்ரீலங்கா அரசை அதிர வைத்த இத் தாக்குதலை நடத்திய புலிகளின் விசேட அணியினர் அக்குறாணை, நீர்கொழும்பு, கிம்புலாப்பிட்டி போன்ற பகுதிகளில் இருந்து வந்திருக்க லாம் என்று கருதப்படுகிறது. தமிழர் கள் மிகக் குறைவாக வசிக்கும் இப் பிரதேசத்தினுள் கணிசமான எண்ணிக் கையானோர் ஆயுதங்களுடன் நுழைந் தது எவ்வாறு என்று படைத்தரப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இத்தாக்குதல்களிற்காக புலிகள் ஆர்.பி.ஜி. லோஞ்சர்கள், இயந்திரத் துப்பாக்கிகள், 40 எம்.எம். சிறிய ரக மோட்டார்கள், கிரனேட் லோஞ்சர் கள், ரி-56 ரக துப்பாக்கிகள், வெடிக்க வைக்கும் கருவிகள் மற்றும் சிறிய கடுகலன்கள் போன்றவற்றைப் பயன் படுத்தியுள்ளனர். இவற்றில் சில ஆயுதங்கள் பின்னர் நடந்த தேடுத லின் போது கண்டெடுக்கப்பட்டன.


தாக்குதலில் ஈடுபட்ட புலிகள் விமானப் படையினர் மற்றும் கொமாண் டோக்களின் சீருடைகளில் வந்தமை யால் தேடுதலில் ஈடுபட்ட படையினர் விசேட அடையாளங்கள் தரித்த உடைகளை அணிந்து கொண்டு தேடுதல் நடத்த வேண்டியதாயிற்று.


நீண்ட காலமாகத் திட்டமிட்டு - மிகத் துல்லியமாக மேற்கொள் ளப்பட்ட - புலிகளுக்கு பலத்த வெற்றியைக் கொடுத்துள்ள- இத் தாக்குதல் நிறைவேறும்வரை ஸ்ரீ லங்கா அரசின் படைத்துறைப் புல னாய்வாளர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.


## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2001
## மாதிரி வினாத்தாள் இல. - 5
## பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **1-3 வரையுள்ள வினாக்களில் முதலில் தரப்பட்ட படத்தோடு அல்லது பொருளோடு மிக நெருங்கிய தொடர்புடைய படத்தை ஏனைய மூன்று படங்களிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

1.

1 2 3(..........)

2.

1 2 3(..........)

3.

1 2 3(..........)

★ **4-7 வரையுள்ள வினாக்களில் புள்ளிக்கோட்டை நிரப்புவதற்குரிய சொல்லை அதன் கீழ்த்தரப்பட்ட நான்கு சொற்களிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


4. நாம் தேவையான பொருள்களை.....................வாங்குகிறோம்.
(1) வீதியில் (2) ஊரில் (3) தோட்டத்தில் (4) கடையில் (..........)

5. மழை, வெயில் என்பவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்ற....... ................உபயோகிக்கின்றோம்.
(1) தொப்பி (2) குடை (3) பொலித்தீன் (4) செருப்பு (..........)

6. நகர வீதிகளில்..........................கூட்டம் அதிகரித்திருக்கிறது.
(1) பஸ்வண்டிகள் (2) லொறிகள்
(3) மக்கள் (4) கடைகள் (..........)

7. எக்கருமத்தையும் மனத்துணிவுடன் முயன்று செய்தால் ____ அடைவோம்.
(1) களைப்பு (2) முயற்சி (3) புகழ்ச்சி (4) வெற்றி (..........)


★ **8-9 வரையுள்ள வினாக்களில் "அ" பகுதியில் உள்ள உருவங்களின் தொடர்புகளுக்கு ஏற்ப "ஆ" பகுதியின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான தொடர்புடைய உருவத்தை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

8.

அ ஆ 1 2 3 (..........)


9.

அ ஆ 1 2 3 (..........)


★ **10-15 வரையுள்ள வினாக்களின் சரியான விடைகுறிக்கும் ஆங்கில எழுத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

10.



தரப்பட்ட சமநிலையில் உள்ள தராசின் படி எத்தனை வித்துக்கள் ஒரு மாம்பழத்திற்குச் சமனாகும்?
(A) 4 (B) 8 (C) 12 (D) 16 (..........)


11.



நிரோசனிடம் 50 ml நீரைக் கொண்ட ஒரு முகவை இருந்தது. அவன் முகவையில் 75ml நீரைச் சேர்த்தான். தற்போது முகவையில் உள்ள நீரின் மொத்த அளவைக் காட்டும் படம் எது?




(..........)

12. கபிலன் வீட்டிற்கும் மைதானத்திற்கும் இடையே பல்வேறு வகைத் தாவரங்கள் உள்ள இடத்தினை படம் காட்டுகின்றது.





கபிலன் தனது வீட்டிலிருந்து மைதானத்திற்குக் காட்டிய ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சென்றான். அவன் எந்த ஒழுங்கில் தாவரங்களை கடந்து சென்றிருப்பான்?
(A) புல், முந்திரிகை, பலா, தென்னை, மா
(B) மா, பலா, தென்னை, முந்திரிகை, புல்
(C) மா, தென்னை, பலா, முந்திரிகை, புல்
(D) முந்திரிகை, புல், மா, தென்னை, பலா (..........)

13 தரப்பட்ட வடிவம் மரக்கட்டைகளால் ஆக்கப்பட்டது. சகல கட்டைகளும் ஒரே அளவினதாகும். இதன்படி இதில் எத்தனை மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.




(A) 5 (B) 6 (C) 10 (D) 11 (..........)

14. இங்கே அருகில் நான்கு மரக் கட்டைகள் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொரு துண்டும் அதற்கு கீழே உள்ள துண்டின் நிறையின் அரைவாசியாகும். துண்டு 4இன் நிறை 2800g ஆயின் 1இன் நிறை யாது?





(A) 280g (B) 350g (C) 1400g (D) 5600g (..........)

15. சமநிலைப்படுத்தப்படாத ஒரு தொகுதி தராசுகள் கீழே உள்ளன.
▨ இப்பொருளின் நிறை தெரியாது.




இதன் அடிப்படையில் பின்வருவனவற்றுள் அப்பொருளின் நிறை எவ்வமைப்புக்குச் சாத்தியமாகும்?



(..........)

★ **கீழ்வரும் வினாக்களில் "அ" பகுதியும் "ஆ" பகுதியும் ஒரே மாதிரி எனின் "ஆம்" எனவும் வேறுபட்டிருப்பின் "இல்லை" எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

| | (அ) | (ஆ) | |
|---|---|---|---|
| 16. | AAABBCBAABCDA | AAABBCABABCDA | (.............) |
| 17. | 122333444421 | 122333444421 | (.............) |
| 18. | XXVXVXXVXXX | XXVXVXXXVXX | (.............) |
| 19. | பமமமபமமபமப | பமமமபமமபமப | (.............) |

★ **20முதல் 21வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழி ஒவ்வொன்றினதும் கருத்தை தருகின்ற மிகப் பொருத்தமான கூற்றின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

20. ஆழமறியாமல் காலை விடாதே.
(1) ஆழமான இடங்களில் காலைவிட்டால் அபாயம்.
(2) எவரையும் ஆளைத் தெரியாமல் நம்பக்கூடாது.
(3) ஒன்றின் இயல்பை அறியாது அதில் பிரவேசிக்கக்கூடாது. (..........)

21. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
(1) யாருக்கும் அளவுக்கு மேல் உதவக்கூடாது.
(2) அளவு அறியாமல் உதவி செய்தால் கஷ்டப்படவேண்டும்.
(3) வீண்செலவு செய்யினும் அச்செலவின் கணக்கை அறிந்திருத்தல் நல்லது. (..........)


★ **22-24 வரையுள்ள வினாக்களின் அறிவுறுத்தல்களை நன்கு கிரகித்து அதற்குரிய சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


22. Aயிலும் பார்க்க B நிறை கூடியவர். Aயும் Cயும் சமநிறை உள்ளவர்கள். Cஇலும் பார்க்க D நிறை குறைந்தவர். இங்கு நிறை கூடியவர் யார்?
(1) A (2) B (3) C (4) D (..........)


23. L, M, N, O, P ஆகியோர் வரிசையாக நிற்கின்றனர். Nஇற்குப் பின்னால் M நிற்கின்றார். Nஇற்கு முன்னால் O நிற்கின்றார். Pயிற்குப் பின்னால் Lஉம், Lஇற்குப் பின்னால் Oவும் நிற்கின்றனர். நடுவில் நிற்பவர் யார்?
(1) L (2) O (3) M (4) N (..........)

24. சேந்தனின் தொலைபேசி எண் ஐந்து இலக்கங்களைக் கொண்டது. இரண்டாம் இலக்கமும் கடைசி இலக்கமும் ஒற்றை எண்களாகும். முதலாம் இலக்கமும் மூன்றாம் இலக்கமும் இரட்டை எண்களாகும். நான்காம் இலக்கம் மூன்றாம் இலக்கத்திலும் 5 குறைவாகும். அவனுடைய தொலைபேசி எண் பின்வருவனவற்றில் எது?
(1) 43169 (2) 73165 (3) 43617 (4) 46387 (..........)

★ **25-27 வினாக்களில் தரப்பட்டுள்ள எண் தொடர்புகளை கண்டுபிடித்து அதற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய பொருத்தமான எண்ணை எழுதுக.**

25.



26.



27.



★ **28-33 வரையிலான வினாக்களின் மிகச் ... இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

28. ஒரு மனிதன் எப்பொழுதும் எதனை உ...
1. வீடு 2. உடை 3. முகம் 4...

29. ஒரு மரத்திற்கு எப்பொழுதும் உள்ள...
1. இலைகள் 2. காய்கள் 3. பூக்கள்...


30. ஒரு கமக்காரனிடம் எப்பொழுதும் இ...
1. மாடு 2. நிலம் 3. பணம்...

31. பஸ்வண்டியில் அளவுக்கு மேலாகப் ... மல் இருப்பது
1. அரசாங்கத்திற்கு அதிக பணம் சேர...
2. பல இடங்களில் பிரயாணிகளை ஏற்ற... என்பதற்காக
3. பிரயாணிகள் சௌக்கியமாகப் பிரய... என்பதற்காக
4. எரிபொருள் முடிந்துவிடும் என்பதற்...

32. வித்திகன் தனது காணியில் பயறோ... அல்லது கடலையோ விதைத்திருக்... மகன் அங்கு கடலை விதைக்கவில்லை... ஆகவே அக்காணிக்குள்
1. பயறு விதைக்கப்பட்டிருக்கிறது.
2. உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது...
3. பயறும் உழுந்தும் விதைக்கப்பட்...
4. பயறு அல்லது உழுந்து விதைக்கப்...

33. பின்வருவனவற்றில் முறைப்படி ஒழுங்... பாடுகளைக் கொண்ட ஒரு விடை உ...
1. விதைத்தல், மிதித்தல், உழுதல், கள...
2. உழுதல், விதைத்தல், களையெடுத்...
3. உழுதல், களைஎடுத்தல், விதைத்த...

★ **கீழே முதலில் தரப்பட்ட கடிகார முகப்... அடிப்படையாகக் கொண்டு ஏனைய ... தரவுகளின் படி நேரங்களையும் கண்டுபிடி... வினாக்குரிய விடையின் இலக்கத்தைப் பு...**


1 2 3

முதலாவது கடிகாரத்தை விட 2ஆவது... பிந்திக் காட்டுகிறது. முதலாவது கடிக... கடிகாரம் 30 நிமிடம் முந்திக் காட்டுகி... காரத்தைவிட 3ஆவது கடிகாரம் 15 நி... றது. இவற்றின் அடிப்படையில்

34. மூன்றாவது கடிகாரம் காட்டும் நேரம்...
(1) 9.15 (2) 8.15 (3) 8.30 ...

35. ஆகமுந்தி நேரத்தைக் காட்டும் கடிக...
(1) 1 (2) 2 (3) 3 ...

★ **பின்வரும் உரைப்பகுதியினை கவனமாக... கீழ் உள்ள வினாக்களுக்குரிய சரியான வி...**

மாணவர்கள் திரளாக வந்து, புகையிரத... ஆசிரியரைப் பயணம் அனுப்பினார்கள்... வாசலில் நின்றவண்ணம் கோவிந்தன்... பார்த்தான். விழிகளில் நீர் திரையிட... விட்டுப் பிரியும் ஆசிரியரைக் கைகூப்பி... யிரதமும் புறப்பட்டது.

36. "திரளாக வந்து" என்பது குறிக்கும்...
(1) ஒவ்வொருவராக வந்து (2) கூட்...
(3) மெல்லமாக வந்து (4) தனி...

37. இப்பந்தியில் ஆசிரியர் பெயர் காண...
(1) ஆம் (2) இல்லை (3) கூறமுடியா...

38. இப்பந்தியில் கூறப்படும் சந்தர்ப்பம் ...
(1) வேற்றூர் பயணம் (2) சோகக்கா...
(3) வேலை நீக்கம் (4) பிரயாசா...

39. "திரையிட" என்பதன் பொருள்
(1) திரைச்சீலையால் மூட (2) அ...
(3) மறைக்க (4) சுரு...


★ **கீழுள்ள மூன்று எண் கூற்றுக்களும் உ...**


○ + □ = 13 ○ − □ = ...

40. இதனடிப்படையில் பின்வருவனவற்றுள்... அது எது எனத் தெரிந்து அது குறிக்கு... சுற்றி வட்டமிடுக.

A. △ + □ = 16 B...

C. □ − 1 = 8 D...








னாக்களின் மிகச் சரியான விடைக்குரிய
கோட்டில் எழுதுக.
ழதும் எதனை உடையவனாக இருப்பான்?
3. முகம் 4. பிள்ளைகள் (..........)
பொழுதும் உள்ளது
ப்கள் 3. பூக்கள் 4. வேர்கள் (..........)
எப்பொழுதும் இருக்க வேண்டியது
3. பணம் 4. கலப்பை (..........)
வுக்கு மேலாகப் பிரயாணிகளை ஏற்றா

அதிக பணம் சேர்ந்துவிடும் என்பதற்காக
ரயாணிகளை ஏற்றி, இறக்கி விடவேண்டும்

க்கியமாகப் பிரயாணம் செய்யவேண்டும்


துவிடும் என்பதற்காக (..........)
ாணியில் பயறோ அல்லது உழுந்தோ
விதைத்திருக்கின்றான். அவனுடைய
விதைக்கவில்லை என்று கூறுகின்றான்.
குள்
பட்டிருக்கிறது.
கப்பட்டிருக்கிறது.
விதைக்கப்பட்டிருக்கிறது.
ழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது. (..........)
முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்
ஒரு விடை உள்ளது அது எது?
தல், உழுதல், களையெடுத்தல், வெட்டல.
ல், களையெடுத்தல், வெட்டல், மிதித்தல்.
த்தல், விதைத்தல், வெட்டல், மிதித்தல்.
(..........)
ட கடிகார முகம் காட்டும் நேரத்தினை
ண்டு ஏனைய நான்கு கடிகாரங்களின்
ளையும் கண்டிபிடித்து அதன் கீழ் உள்ள
இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.



3 4 5

தை விட 2ஆவது கடிகாரம் 45 நிமிடம்
முதலாவது கடிகாரத்தை விட 4 ஆவது
முந்திக் காட்டுகிறது. இரண்டாவது கடி
கடிகாரம் 15 நிமிடம் முந்திக் காட்டுகி
படையில்
காட்டும் நேரம் யாது?
. (3) 8.30 (4) 9.30 (..........)
காட்டும் கடிகாரம் எது?
(3) 3 (4) 4 (..........)
பினை கவனமாக வாசித்த பின் அதன்
குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
ந்து, புகையிரத நிலையம் வரை சென்று,
அனுப்பினார்கள். புகைவண்டியில் ஏறி,
ம் கோவிந்தன் தனது மாணவர்களைப்
நீர் திரையிட எல்லோரும் தம்மை
ரைக் கைகூப்பி வணங்கினார்கள். புகை

து குறிக்கும் பொருள்
வந்து (2) கூட்டமாக வந்து
(4) தனியாக வந்து
பெயர் காணப்படுகிறதா?
(3) கூறமுடியாது (4) தெரியாது.
சந்தர்ப்பம் யாது?
(2) சோகக்காட்சி
(4) பிரிவுபசாரம்.
பொருள்
(2) அலையெறிய
(4) சுருங்க.
ற்றுக்களும் உண்மையானவை.



பருவனவற்றுள் ஒன்று உண்மையாகும்.
அது குறிக்கும் ஆங்கில எழுத்தைச்

B. △ + 3 = 11

D. ◯ + △ = 17

## பகுதி 2 நேரம்:- 1மணி 15 நிமிடம்

★ **கீழ்வரும் பாடலை வாசித்து 1 முதல் 17 வரையான வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

*மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே*
*வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா*
*வானும் கடலாக மாறுதம்மா - இந்த*
*மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா*
*அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்*
*ஆம்பலும் கண்டு களிக்குதம்மா*
*இம்பருலகின் இயல்பிதம்மா - மதிக்*
*கின்னார் இனியாரும் உண்டோ அம்மா*

1. இப்பாடல் காட்சியினை எந்தப் பொழுதினில் காணலாம்?
..........
2. இங்கு "மீனினம்" என எவை குறிப்பிடப்படுகின்றன?
..........
3. கவிஞர் வெள்ளி ஓடம் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?
..........
4. கடலுக்கு ஒப்பாக கூறப்படுவது எதனை?
..........
5. இந்தப் பொழுதினிலே மகிழ்ச்சியடைவது எது எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?
..........

★ **ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.**
6. அம்புயம் .......... 7. உலகம் ..........
8. களிப்பு .......... 9. உள்ளம் ..........

★ **பாடலில் உள்ள வினை எச்சங்களை எழுதுக.**
10. .......... 11. ..........


★ **பிரித்தெழுதுக.**
12. மீனினம் = .......... 13. ஓடமொன்று = ..........

★ **ஆங்கிலப் பதம் எழுதுக.**
14. வானம் .......... 15. கடல் ..........
16. மீன் .......... 17. மதி ..........

★ **கீழே இலங்கையில் உள்ள மதத்தவர்களையும், அவர்களின் புனிதமான நூல்களும், அவர்களால் கொண்டாடப்படும் சமய விழாக்களும் ஒழுங்கின்றித் தரப்படுகின்றன.**

*மதத்தவர்கள்* - இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள்
*நூல்கள்* - திரிபிடகம், திருகுர்ஆன், பைபிள், வேதசிவாகமம்
*விழாக்கள்* - நத்தார், தீபாவளி, வெசாக், ரம்ழான், நவராத்திரி, பொசன், ஈஸ்டர், ஹஜ்.


மேலே தரப்பட்ட விவரங்களை அவர்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களின் கீழே "அ" பகுதியில் மதத்தவர்களையும் "ஆ" பகுதியில் நூல்களையும் "இ" பகுதியில் விழாக்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.

18.


19.



(அ) .......... (அ) ..........
(ஆ) .......... (ஆ) ..........
(இ) 1.......... (இ) 1..........
2.......... 2..........

20.


21.



(அ) .......... (அ) ..........
(ஆ) .......... (ஆ) ..........
(இ) 1.......... (இ) 1..........
2.......... 2..........

★ **கீழே தரப்பட்ட பரிசோதனைச் செயற்பாட்டை தரம் 5 இல் கல்வி கற்கும் துவாரகன் வீட்டிலே செய்து பார்த்தார். அவரிடம் நீர், எண்ணெய், மணல், மரத்துண்டு ஆகியன இருந்தன. அவர் கீழே காட்டியுள்ளவாறு ஒரு தடவையில் இரண்டைக் கலந்தார்.**




பின்னர் இந்த அமைப்பிலுள்ள பொருள்கள் யாவற்றையும் ஒரு பாத்திரத்தில் இட்டார். அப்போது
22. மேலே இருக்கும் பொருள் யாது? ..........
23. கீழே இருக்கும் பொருள் யாது? ..........
24. மேலுள்ளவற்றில் நீரில் மிதக்கும் பொருள்கள் எவை?
.......... ..........

★ **உலர் மின்கலம், மின்குமிழ் கிளிப்புகள், ஆணிகள், சிறிய பலகை துண்டுகள் ஆகியவற்றால் செய்யப்பட்ட இரு ஆளிகள் (A,B) கம்பிகளினால் தொடுக்கப்பட்டுள்ள முறையை கீழுள்ள உருக்காட்டுகிறது.**




25. இவ் உருவுக்கமைய மின்குமிழை எரியச்செய்ய எவ் ஆளிகளை மூடவேண்டும் என்பதை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) A எனும் ஆளியை மூடவேண்டும்.
(2) B எனும் ஆளியை மூடவேண்டும்.
(3) A,B ஆகிய இரு ஆளியையும் மூடவேண்டும்.

★ **பினவரும் உணவுப் பண்டங்களைப் பாதுகாக்கும் முறைகளை அருகே தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 26. எலுமிச்சம்பழம் | (.........) | A. போத்தலில் அடைத்தல் |
| 27. தானியங்கள் | (.........) | B. புகையூட்டல் |
| 28. குளிர்பானங்கள் | (.........) | C. ஊறுகாயிடுதல் |
| 29 புகையிலை | (.........) | D. குளிரூட்டல் |
| 30 சிறுமீன் | (.........) | E. உலர்த்துதல் |
| 31 இறைச்சிவகை | (.........) | F. கருவாடாக்கல் |

★ **பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**
32. வலைப் பந்தாட்டம் ஒரு கிராமிய விளையாட்டாகும். ( )
33. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். ( )
34. சிறு விளையாட்டுக்கள் மாணவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ( )
35. கிளியொன்றின் மாதிரி உருவத்தைச் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மூலப்பொருளாக குருத் தோலையைப் பயன்படுத்தலாம். ( )
36. பயம், கோபம், விருப்பு, வெறுப்பு, சந்தோசம் போன்ற உணர்வுகளை முகபாவனை மூலம் வெளிப்படுத்த முடியாது. ( )
37. "கும்மிநடனம்" கிராமிய நடனங்களில் ஒன்றாகும். ( )
38. தையல் பழகுவதற்கு இலகுவான ஊடகம் கடதாசி ஆகும். ( )
39. கடதாசிப் பூ அலங்கார ஆக்கத்திற்கு கடதாசி, கம்பி, ஈர்க்கு போன்றன தேவைப்படும். ( )
40. இயற்கை உலகில் காண முடியாத, மனதில் கற்பனை செய்து கொள்ளக்கூடிய சித்திர ஆக்கம் உண்மைச் சித்திர ஆக்கமாகும். ( )
41. அகலக் கோடுகள், முறிகோடுகள், வளைவு இரேகை என்னும் சொற்கள் தையல் பாடத்துடன் சம்பந்தப்பட்டன. ( )

★ **குமரன் தரம் 5இல் கல்வி கற்கின்றான். அவனது தகப்பனார் வீட்டிற்குத் தேவையான பொருள்களை கடையில் வாங்கி வந்தார். அவர் வாங்கிய பொருள்களும் அவற்றின் அளவும் கீழே தரப்பட்டுள்ளன. அதன் அடிப்படையின் கீழுள்ள வினாக்களுக்குரிய விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | |
|---|---|
| காற்சட்டைத்துணி | - 2 1/2 மீற்றர் |
| தேங்காய்கள் | - 8 |
| மின்கலம் | - 3 சோடி |
| தீப்பெட்டி | - 1 டசின் |
| சீனி | - 3 கிலோகிராம் |
| அரிசி | - 8 1/2 கிலோகிராம் |
| தேங்காயெண்ணெய் | - 1 போத்தல் |

42. கடையில் தகப்பனார் வாங்கிய சீனியினதும் அரிசியினதும் மொத்த அளவை கிராமில் எழுதுக. .......... கிராம்.
43. தேவையான காற்சட்டைத் துணி வாங்குவதற்கு 150 ரூபாவை கொடுத்திருந்தால் 1 மீற்றர் துணியின் விலை யாது?
..........ரூபா..........சதம்
44. ஒரு சோடி மின்கலத்தின் விலை 32ரூபா ஆகும். குமரனின் அப்பா கடையில் வாங்கிய மின்குமிழ்களின் மொத்த விலையும் தேங்காய்களின் மொத்த விலையும் சமனாகவே இருந்தது. அதன்படி 1 தேங்காய் என்ன விலை?
..........ரூபா..........சதம்
45. 1 தீப்பெட்டி 2ரூபா 50சதமாகும். குமரனின் தகப்பனார் வாங்கிய தீப்பெட்டிகளின் பெறுமதி எவ்வளவு?
..........ரூபா..........சதம்
46. 1 லீற்றர் தேங்காயெண்ணெயின் விலை 40ரூபா ஆகும். குமரனின் தகப்பனார் வாங்கிய எண்ணெயின் விலைப் பெறுமதி எவ்வளவு? ..........ரூபா..........சதம்
47. தகப்பனார் வாங்கிய சீனியினை குமரன் 12 சிறிய போத்தல்களுள் அடைத்துவைத்தான். அதன்படி 1 போத்தலில் உள்ள சீனியின் அளவு யாது?..........கிராம்
48. 500கிராம் அரிசியின் விலை 18ரூபா ஆகும். குமரனின் தகப்பனார் வாங்கிய அரிசியின் மொத்த விலை என்ன?
..........ரூபா..........சதம்
49. குமரனின் தகப்பனார் வாங்கிய சீனியின் மொத்தவிலை 105ரூபா எனின் அவர் 50கிலோகிராம் சீனியை வாங்கியிருந்தால் அவர் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார் என்பதைச் சொற்களில் எழுதுக?..........

★ **பின்வரும் சொற்களை வைத்து அதன் கீழுள்ள பந்தியில் கருத்துப் புலப்படுமாறு கீறிட்ட இடங்களை நிரப்புக.**
(நடந்தனர், வரிசையாக, அயலிலே, இருந்தது, சலசல, செல்லும், இருவரும், சிறிய, பக்கத்திலும்)
அவர்கள் 50.......... வளைந்து வளைந்து 51 .......... மலைப்பாதை வழியே 52 .......... அப்பாதையின் 53 .......... ஒரு பள்ளத்தாக்கு 54.......... அதன் நடுவே சிற்றருவியொன்று 55 .......... எனப் பாய்ந்தது. அதன் இரு 56 .......... சின்னஞ் 57 .......... செடிகள் 58 .......... நின்றன. தொழிலாளர் இருவர் நீர் ஊற்றினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

தயாரிப்பு:
திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)
(மட்/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை,
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.)

# கலைக் கல்லூரி ஒன்று இங்கு உருவாக்கப்பட வேண்டும்

**ஈழத்தின் மூத்த சிற்ப, சித்திர ஆசிரியர், கலைஞர் கலாபூஷணம் அளவையூர் செ.சிவப்பிரகாசம் கலைச்சுடருக்கு வழங்கிய செவ்வியின் முதற்பகுதி கடந்த வாரம் 'கலைச்சுடரில்' வெளியாகியிருந்தது. அதன் எஞ்சிய இறுதிப் பகுதி இவ்வாரம் கலைச்சுடரில் இடம்பெறுகிறது.**

**சந்திப்பு: ஆனந்தன்**

**1960**ஆம் ஆண்டு மகாஜனக் கல் லூரியின் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளையின் ஓவியத்தை நான் வரைந்தேன். அது மட்டுமன்றி கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட போது ஸ்தாபகரின உருவச்சிலை ஒன்றையும் நான் உருவாக்கினேன்.

மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சேர் நிக்கலஸ் ஆட்டிக்கல எனக்கு 'சிற்ப கலாநிதி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

மன்னர்கள், ஆன்மீகவாதிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், சமூகத்தொண்டர்கள், கலைஞர்கள் எனச் சுமார் 50 பேரின் உருவச்சிலைகளை நான் உருவாக்கியுள்ளேன்.

சேர்.பொன்.இராமநாதன், லீலாவதி இராமநாதன், நல்லூர் மன்னன் சங்கிலியன் (தற்போது உள்ள சிலை அல்ல), பண்டாரவன்னியன், குமாரசாமிப்புலவர், அருட்திரு.லோங் அடிகளார், மழவராயர் கந்தையா, காசிவாசி செந்திநாதையர், எம்.திருச்செல்வம், யாழ்மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்களான டீ.ரி.நைல், ஏ.இ.தம்பு, கலைப்புலவர் நவரத்தினம் மற்றும் கலாயோகி ஆனந்தகுமாரசாமி, தவில் மேதை தெட்சணாமூர்த்தி, யோகர் சுவாமி, நல்லை ஆதீன முதலாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோரின் சிலைகள் நான் அமைத்தவற்றுள் முக்கிய இடம்பெறுகின்றன.



'சித்திரக் கலாநிதி'
செ.சிவப்பிரகாசம்

யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் நான் வரைந்த ஓவியங்கள் இன்றும் உள்ளன. யாழ். மாவட்டத்தில் மட்டும் 22 ஆலயங்களில் ஓவியமாக எனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளேன்.

நல்லூர்க் கந்தசாமி கோயில், வண்ணைஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம், திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் ஆலயம், திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயங்களில் நான் வரைந்த ஓவியங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் சிற்பச்சக்கரவர்த்தி செ.சிவப்பிர காசத்தினால் அமைக்கப்பட்ட சிற்பமொன்று (முற்றிலும் சிமெந்தினால் சுவரில் அமைக்கப்பட்டுள்ளது.)

வேம்படி மகளிர் கல்லூரியில் பிரமாண்டமான முறையில் கீதா உபதேசம் செய்யும் சிற்பத்தினையும் மிகவும் அழகுற அமைத்துள்ளேன். அத்துடன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு 63 நாயன்மார்களது முழு உருவச்சிலைகளையும் சிற்பங்களையும் வடித்தேன்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் சுவரோவியங்களாக ஆறுபடை வீடு, 108 சிவதாண்டவங்கள், குதிரையில் உலாவரும் சூரியன் உட்பட கைலயங்கிரிக் காட்சிகள் பாரம்பரிய சாஸ்திர முறைப்படி அளவுப் பிரமாணம் தவறாது வரைந்துள்ளேன். இன்றும் அந்தப்பணி தெய்வீகப் பணியாகத் தொடர்கிறது. இவற்றைத் தவிர அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயம், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலும் எனது கைவண்ணத்தில் ஓவியங்களை வரைந்துள்ளேன்.



நல்லூர் முத்திரைச்சந்தியில் கலாபூஷணம் செ.சிவப்பிரகாசம் அமைத்த வீரத்தமிழ்மன்னன் சங்கிலியனின் உருவச்சிலை. (இந்தச் சிலை 1996ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு விட்டது)

நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியில் முன்னர் கம்பீரமாகக் காணப்பட்ட தமிழ் மன்னன் சிலை நான் அமைத்த சிலைகளுள் (1974ஆம் ஆண்டு) முக்கியமானது பெறுகிறது. இச்சிலையை அமைப்பதற்கு முன்னர் சங்கிலியன் வரலாறு குறித்து வெளிவந்த நூல்களைப் படித்தேன். அதிலிருந்து சங்கிலியனின் உருவமைப்பு, திடகாத்திரம், குதிரையின் குணாதிசயங்கள் என்பவற்றை மனதில் கொண்டு சிலையை வடித்தேன்.

எனினும் சுமார் 22 வருடம் கம்பீரமாக - ஈழத்தமிழனின் வரலாற்றுப் பொக்கிசமாக - ஈழத்தமிழனின் வீர வரலாற்றுக்குச் சான்றாக - விளங்கிய அந்தச் சங்கிலியன் சிலை 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த இடத்தில் கம்பீரமானதொரு சங்கிலியன் சிலையை நிறுவ எவர் முன்வரினும் அதற்கு எனது பூரண பங்களிப்பை வழங்கக் காத்திருக்கின்றேன்.



சேர்.பொன்.இராமநாதனின் உருவத்தை ஓவியமாக வரைகின்றார் சித்திரக்கலாநிதி செ.சிவப்பிரகாசம்.

1981ஆம் ஆண்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் நான் அமைத்த பண்டாரவன்னியன் சிலை இன்றும் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

நான் அமைத்த சிவசாயி சித்திரக் கோட்டமும் சிற்ப கலாசாலையும பல சிற்ப, சித்திர கலைஞர்கள் உருவாகியுள்ளனர். இத்தகைய கலைஞர்கள் திருநெல்வேலியைச் சேர்ந்த கலைவாணி கலையகத்தின் ஸ்தாபதி வர்ணக்கலாநிதி அமரர் இகனகராஜா ஆசாரியார், வவுனியாவைச் சேர்ந்தவர்களான திருமதி சிவகௌரி பாகசியராசா, ஆறுமுகதாஸ், சின்னப்பு, இந்திராஜா ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

எனது மாணவர்களில் பலர் அவுஸ்திரேலியா, லண்டன், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் சித்திர சிற்பக்கலையை வளர்த்துவருகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தினால் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட சித்திரமும் வடிவமைப்புக் கலையும் டிப்ளோமா கற்கைநெறி எதிர்காலத்தில் சிறந்த ஓவியர்களையும், சிற்பிகளையும் உருவாக்கித்தரும் என நான் உறுதிபடக் கூறுகின்றேன். இந்த வகையில் இந்தக் கற்கை நெறியை அறிமுகம் செய்த யாழ்பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொன்பாலசுந்தரம்பிள்ளை என்றும் கலை உலகத்தின் நன்றிக்குரியவராகக் கருதப்படுவார்.

'கலாபூஷணம்'
**சிவப்பிரகாசம்**
செவ்வி

இந்தியக் கலைஞர்களை எதிர்பார்க்காமல் ஈழத்துக் கலைஞர்களே சிற்பங்களையும், ஓவியங்களையும் எமது நாட்டில் படைக்கும் காலம் வெகுவிரைவில் உருவாகும் என நான் நினைக்கின்றேன்.

எனது மாணவர்களின் உதவியுடன் மிகப் பெரிய அளவில் சித்திர, சிற்பக்கண்காட்சியை நடத்தவும் திட்டமிட்டுள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் கலைக்கல்லூரி ஒன்று உருவாக்கப்பட்டு அந்தக் கல்லூரியை மையமாகக் கொண்டு பல்துறை கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனது இறுதி விருப்பம். இதனை கலைகலை ஆர்வலர்களும், அரசாங்கமும், இந்து சமயம் சார்ந்த அமைச்சர்களும் தமது தார்மீகக் கடமையாகப் பொறுப்பேற்றுச் செய்யவேண்டும்.



யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைஞர் கலாபூஷணம் செ.சிவப்பிரகாசம் அமைத்த சேர்.பொன்.இராமநாதனின் உருவச்சிலை கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

இவ்வாறு தனது நீண்டகால கலை வரலாற்றை விவரித்தார் அளவையூர் கலாபூஷணம் செ.சிவப்பிரகாசம்.

கலைஞர் சிவப்பிரகாசத்தின் மனைவி திருமதி அன்னலட்சுமியும் யாழ்.மத்தியகல்லூரியில் சித்திரபாட ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். புதிரர்களில் ஒருவரான துஷ்யந்தன் என்பவர் பொறியியலாளராக ஜேர்மன் நாட்டில் கடமையாற்றிவருகிறார். மற்றைய புத்திரர் அனுசாந்தன் மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பான டாக்டராகக் கடமையாற்றிவருகின்றார்.

(முற்றும்)



யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திய தமிழ் விழாவில் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், சங்கானை பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. எவ்.கே.ஈ.செல்வராஜா அடிகளர் மேற்படி இருவருக்கும் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். திருமதி மனோன்மணி சண்முகதாஸ், அருட்திரு. மரிய சேவியர் அடிகள், யாழ்.பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (ஜ-6-7)




# நடிகர் திலகம் 'சிவாஜி' ஒரு சகாப்தம்

**தென்புலோலியூர்**
**பரா.றமேஸ்**



**தி**ரும்பிப்பார்ப்பதற்குள் சிவாஜி கலை உலகுக்குள் நுழைந்து அறுபத்தைந்து வருடங்களாகிவிட்டன. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவன் வாக்குக்கு பெருமை சேர்த்த சிவாஜியை கலைத்தாய் ஏழாவது வயதிலேயே தத்தெடுத்து தன் அருளைப் பரிபூரணமாக வழங்கினார்.

அன்றிலிருந்தே அவர் உடல், உயிர், உணர்வு, நாடி, நரம்புகளிலெல்லாம் நடிப்பு ஊறிப்போய் தமிழ்த் திரை உலகிலே கொடிகட்டிப் பறக்கத் தொடங்கினார். தந்தை பெரியாரால் 'சிவாஜி'யாக மகுடம் சூட்டப்பட்டு, கலைஞரின் கருத்தாழம் மிக்க வசனங்களை கணீர்க் குரலில் அடுக்காகப்பேசி தன்னுடைய முதல் படத்திலேயே பராசக்தியின் அருளை முழுமையாகப் பெற்று 'நடிகர் திலகம்' ஆகி 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று மக்கள் திலகத்தால் இணைக்கப்பட்டு தமிழகத்தின் கலை, அரசியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறார் சிவாஜிகணேசன். இவர் ஏற்காத பாத்திரமில்லை, வேண்டாத வேடமில்லை, அண்ணாரைத் தேடி வந்து கனமான பாத்திரங்களை எல்லாம் இவரின் நடிப்பாற்றலால் சுடர்விட்டுப் பிரகாசித்தன. தமிழில் மட்டு மல்ல மலையாளம், தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழிகளிலும் தன் திறமையை வெளிக்காட்டினார். இனிவரும் எந்தக காலத்திலும் தன்னுடைய சாயலைப் பின்பற்றாமல் எவருமே நடிக்க முடியாது என்ப தற்கேற்ப நடிப்பிற்கு வரைவிலக்கணம் கொடுத்தவர் சிவாஜி. இந்தியனில் கமல் வயோதிபராக நடிக்கும் முன்பே திருவருட் செல்வனில் வயோதிபராக தோன்றியவர் சிவாஜி. சிற்றிசனில் அஜித் ஒன்பது வேடம் ஏற்கும் முன்பே நவராத்திரியில் ஒன்பது வேடம் ஏற்றவர் சிவாஜி. தேசியவிருதுகள், பத்மசிறீவிருது, செவாலியவிருது, பால்கேவிருது, தமிழகத்தின் சிறந்த கலைஞருக்கானவிருது போன்ற கௌரவவிருதுகளுக்குப் பெருமை சேர்த்தவர் சிவாஜி கணேசன். சிவாஜி ஓர் ஈடிணையற்ற கலைஞர் மட்டுமல்ல, ஒப்பற்ற கதாநாயகன் மட்டுமல்ல, உலகம் கண்ட கலை வல்லாளர்களில் ஒருவர். மறைந்தும் மறையாத மாமனிதர் சிவாஜிகணேசனின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக!

வாழ்க சிவாஜி புகழ்!



## வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின்...... (6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200 ஐச் 'செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை' என்ற பெயருக்குக் காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

13. விண்ணப்பிக்கும் முறை:-

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21செ.மீ. X 29 செ.மீ. ) தாளின இரு பக்கங்களையும உபயோகித்து விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 2001.08.27 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, இ. 35, மக்கெய்ஸர் வீதி, உவர்மலை, திருகோணமலை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாணப் பொது எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் சேவைகளின் வகுப்பு II பிரிவு 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001" என்று பரீட்சையின் பெயரை குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பின்வரும் விவரங்களும் குறிப்பிடப்படல் வேண்டும்

(அ) பரீட்சையின் பெயர்:
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்:
(இ) முகவரி:
(ஈ) விண்ணப்பம் அனுப்பப்பட்ட முகவரி:
(உ) பதிவுத் தபால் இலக்கமும் திகதியும்:

(14) இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் தீர்மானத்திற்கமைய, குறிப்பிட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்கு அழைப்பதன் மூலம் விண்ணப்பதாரி இப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

(15) மாவட்ட இலக்கமும் பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களின் எண்களும் பின்வருமாறு:-

| மாவட்டம் | மாவட்ட இல. | நகர எண் | மாவட்டம் | மாவட்ட இல. | நகர எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - 1 | 1 | திருகோணமலை | - 6 | 6 |
| மன்னார் | - 2 | 2 | மட்டக்களப்பு | - 7 | 7 |
| வவுனியா | - 3 | 3 | [illegible] | - 8 | 8 |
| கிளிநொச்சி | - 4 | 4 | கலமுனை | - 9 | 9 |
| முல்லைத்தீவு | - 5 | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப் பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

க.சிவசிதம்பரம்,
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

---

# மாதிரி விண்ணப்பப் படிவம்
# வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் மாகாணப் பொது எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் சேவைகளின் வகுப்பு II பிரிவு 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:- திரு/திருமதி/செல்வி:-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
03. தபால் முகவரி:-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
04. நிரந்தர முகவரி :-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

05. பால்

| ஆண் M | பெண் F |
|---|---|
| | |

06. பிறந்த திகதி:-
2001.08.27 ஆம் திகதியன்று வயது:-

| வருடம் : | மாதம்: | திகதி : |
|---|---|---|
| வருடங்கள்: | மாதம்: | நாள்கள்: |

07. இனம் : சிங்களவர் [ ] இந்தியத் தமிழர் [ ]
இலங்கைத் தமிழர் [ ] ஏனையவர் [ ]
முஸ்லிம் [ ]

08. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
வம்சாவளியினாலா / பதிவுசெய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.....................
09. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டமும் இலக்கமும்:
(2) பிரதேச செயலர் பிரிவு:-
(3) வதியும் கால எல்லை:- தொடக்கம்:- வரை:-
(10) விண்ணப்பிக்கும் பதவியை விருப்புரிமை அடிப்படையில் குறிப்பிடவும் (பந்தி 2 இன் படி) 1 [ ] 2 [ ] 3 [ ]

11. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:- [ ]
தமிழ் T/ சிங்களம் S/ ஆங்கிலம் E
12. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:-
(15ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்) [ ]
13. நீங்கள் நியமனம் கோரும் மாவட்டம்:-
மாவட்ட இலக்கம்:-
14. விளம்பரத்தின் 10 (II) பந்தியின் கீழ் வலது குறைவுக்கான புனர்வாழ்வுச் சலுகை நிபந்தனையின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா? ஆம் [ ] இல்லை [ ]
15. கணக்குப் பதிதல் பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா? ஆம் [ ] இல்லை [ ]
16. கல்வித் தகைமைகள்:-
(i) க.பொ.த (சா/த) ஆண்டு:- சுட்டெண்:-
முதலாம் அமர்வு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க.பொ.த (சா/த) ஆண்டு:- சுட்டெண்:-
இரண்டாம் அமர்வு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(ii) க.பொ.த (உ/த) ஆண்டு:- சுட்டெண்:-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(iii) விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருந் தால்:-
பல்கலைக்கழகம்:-
பட்டம் :-
சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:-
(iv) 6.2 பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழின் விவரம்:-
பின்பற்றியுள்ள பாடநெறியின் பெயர்:-
சான்றிதழை வழங்கிய நிறுவனம் :-
சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:-
17. பணம் செலுத்திய பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்:-

[ ]

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட --------- பிரதேச செயலகத்தின்---------ஆம் இலக்க---------- ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும், இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால், பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

திகதி------------------------------ ------------------------------
விண்ணப்பதாரியின் கையொப்பம்

18. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவிவகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.
19. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/ செல்வி------------------------------என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் -----------------------ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி -------------------- ------------------------------
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)
(வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து தற்காலிகமாக வேறு மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும் அவர்-------------------- திகதி முதல் தற்காலிகமாக இடம் பெயர்ந்து ---------------------------- மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- -------------------- ------------------------------
பிரதேச செயலர்/கிராம சேவகர்
கையொப்பம்.

பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)
20. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு ------------------ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும், இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும், சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும், இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:------------------------------ ------------------------------
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பெயரும்.

பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)

## புலமைப்பரிசில் பரீட்சை........

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

59. இரப்போர்க்கு இல்லையெனாது வழங்குபவன் எவ்வாறு அழைக்கப்படுவான்? ..........................

60. ஒரு தேசத்தின் பெருமையையும் கௌரவத்தையும் பிரதிபலிப்பதற்காகப் பாடப்படும் பாடல்?

..........................

61. நித்திரை/அதிகாலையில்/எழும்புவது/நல்ல/விட்டு/பழக்கமாகும். இவற்றை கருத்துள்ள ஒரு வசனமாக எழுதுக.


..........................

62. தானே தன்னைப்பற்றி எழுதுவது எவ்வாறு அழைக்கப்படும்?

..........................

63. நாய் குரைக்கும் என்பது போல குதிரை ..........................


★ கீழே தரப்பட்டுள்ள படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.




64. A .......................... 66. C ..........................

65. B .......................... 67. D ..........................

★ கீழே காட்டப்பட்ட படத்தை அவதானித்து விடை எழுதுக.




68. A என்பவர் Bயிற்கு எத்திசையில் இருக்கின்றார்?

..........................

69. C என்பவர் Bயிற்கு எத்திசையில் இருக்கின்றார்?

..........................


★ நான் ஒரு பறவையானால் .... என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒவ்வொரு வசனத்திலும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருப்பதோடு அழகான கையெழுத்தில் தெளிவாக எழுதப்படவும் வேண்டும்.

70. ..........................
71. ..........................
72. ..........................
73. ..........................
74. ..........................
75. ..........................

..........................

..........................

## 6ஆம் மாத நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1959 | 2001 |
| 07 | 01 |
| 22 | 30 |

### அமரர்
### வல்லிபுரம் சிவானந்தன்

*சிந்தை கலங்க வைத்துச் சிவனுலகு சென்றுவிட்ட*

வரணியூர் சிவா

இன்முகம் காட்டி என்றும்
இணையில்லா வாழ்வு தந்த எனதருமைக் கணவரே!
சீராட்டி எமை வளர்த்து
சீர் நெறிகாட்டி வைத்த எமதன்பு டாடியே!
நாட்டு நிலை சீர்கேட்டால்
நான்கரை வருடம் பிரிந்திருந்து - எமைக்காண
"நான் வருவேன்" என்னும் உங்கள் குரல்கேட்டு
நாம் மகிழ்ந்திருக்கும் வேளையிலே - தங்கள்
நாடியோட்டம் நின்றுவிட்ட பெருந்துயர்ச் செய்திகேட்டு
நாம் வந்திட்டோம் பதைத்தோடி - அங்கு தாங்களில்லையே
நம் விதியென்ன விதியோ ஐயா! தினம்
நலிந்து வாடுகின்றோம் - உம் பிரிவால்
நாம் சிந்தும் கண்ணீர் கொஞ்சமல்ல
சிறகிழந்த பறவையாய்த் துடிக்கின்றோம்
தீராது தீராது உமைப்பிரிந்த எம் சோகம் தீராது

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:-*
*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.*

*உங்கள் பிரிவால்*
*தினம் வாடும்*
குடும்பத்தினர்.

(90517)

## முன்பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டம்

வலி.வடக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்க மாதாந்தக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால், சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவி எஸ். நிர்மலநாயகி கேட்டுள்ளார். (க-10)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்மா, வாதநோய்கள்,
வலிப்புநோய், பீனிசம்,
தலையிடி, தலை, கால்
அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க் குத்து,
இரத்தப் போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக் குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
சி.இராசரத்தினம்,
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459*

(90548)

## UNIVERSITY OF JAFFNA

Applications will be received by me from suitable candidates upto 31.08.2001 for the post of technical officer, Grade II segment 'A'

Post : TECHNICAL OFFICER GRADE II SEGMENT 'A'

i. Electronics
ii. Electronics & Telecommunications. Engineering technology.

Salary Scale: Rs.7,165 - 11x130 - 8,595 p.m.

**Qualifications:**

1. National diploma in technology in the relevant field of Specialization or its equalifications.
2. Age not more than 40 years.

Selection by practical test and Interview

**Note:** Preference will be given to those who have experience in the field on Electronic & repairing of computer equipments.

**Statutory Benefits.**

1. Membership in Universities povident Fund and pension scheme in the University system.
2. Gratuity payments.
3. Employees Trust Fund Benefits.
4. Free medical service.

Details and the application forms may be obtained from the office of Assistant Registrar/Estabilshments (Non Academic) of the University, on a payment of Rs.20/- for each ap-pilcation form at the shroff's counter. Those who wish to obtain to the forms and details by Post should be send the money order or Postal order to the value of Rs. 20/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed Rs.3.50/- stamped envelope of 23x10c.m. in size. Application sent on specified form only will be accepted.

Application from Governments, State Corporation and Statutery Bodies should sent their application through the Head of such Institutions. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date and application on which the particulars are stated illegibly will be rejected.

**REGISTRAR.**
University of Jaffna.
*Thirunelvely,*
*Jaffna.*

27.07.2001

(C/17608)

உ

## சாவகச்சேரி ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலய
## *அலங்கார உற்சவமும் ஆடிவேல் விழாவும்*

பழநி ஆண்டவர் பக்தர்களே!

விஷு வருட அலங்கார உற்சவ விழாக் காலமாகிய 30-07-2001 முதல் 04-08-2001 வரையுள்ள 16 தினங்களிலும் இவ்வருட விழா, நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக நிகழாத போதிலும் வழமை போல் விரதமனுஷ்டித்து வழிபாடாற்றி முருகன் அருள்பெறுமாறு அடியார்களை வேண்டுகின்றேன்.

அத்துடன், எங்கள் ஆலய பூசகராய் அரும்பணியாற்றி 16.01.2001 அன்று திடீர் மறைவெய்திய அமரர் பிரம்ம ஸ்ரீ சாம்சிவசர்மா இந்திர சர்மா அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் அனைவரும் ஸ்ரீ பழநி ஆண்டவரைப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(ஆசிரியர்)
(பிரதமகுரு: கல்வயல் ஐயனார் ஆலயம்)

(90504)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ஸ்ரீ முருகன் ஆலயம்
### கல்வந்தாழ்வு தென்மேற்கு, காரைநகர்.



எமது ஆலயத்தை புனரமைப்பதற்கு நிதி உதவி அளித்த, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு கௌரவ அமைச்சர் **திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான **திரு.கே.வி.குகேந்திரன்** அவர்களுக்கும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான **திரு.என்.மதனராஜா** *(மனோ)* அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் காரைநகர் பொறுப்பாளரான **திரு.ப.கேதீஸ்வரன்** *(விசு)* அவர்களுக்கும்

ஸ்ரீ முருகனின் அருளாசி வேண்டி, பாராட்டி வாழ்த்தி, எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*கல்வந்தாழ்வு தென்மேற்கு,*
*காரைநகர்.*

- ஆலய பரிபாலன சபை

(90529)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 24 |
| 08 | 07 |
| 1937 | 2000 |

### அமரர்
### அம்பலவாணர் குலசேகரம்
J.P.

*(இளைப்பாறிய நூலகர் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், சனசமூக நிலையங்களின் சமாஜ முன்னாள் செயலாளர், தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி உறுப்பினர்)*

திதி:-30-07-2001

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்தான்
ஓடினாலும், மாறாது ஐயா உங்கள் நினைவு
எம்மை விட்டு ஒரு போதும்!

*ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.*

மனைவி, பிள்ளைகள்.

(90511)

## விளையாட்டு நிகழ்வுகள்

குருநகர், ஜூலை 30

யாழ். கல்வி வலயப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் 12 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று**

★ பி. ப. 2.45 — புனித யோசப் வித்தியாலயம் எதிர் சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை.

★ பி. ப. 3.30 — ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் எதிர் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

★ பி. ப. 4.10 — புனித பத்திரிசியார் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

**நாளை**

★ பி. ப. 2.45 — புனித ஜோன்ஸ் கல்லூரி எதிர் உரும்பிராய் றோ. க. பாடசாலை.

★ பி. ப. 3.30 — புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

★ பி. ப. 4.10 — புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம். (3-51)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவலர் சபையினால் நேற்று வெளியிடப்படவிருந்த மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடு, தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த மலர் வெளியிடப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறங்காவலர் சபை தெரிவித்துள்ளது.

## கத்திவெட்டு!

தென்மராட்சி, ஜூலை 30

பத்து வருடங்களுக்கு முன்னர் வெளிநாடு செல்வதற்கு கடனாக வழங்கிய 20 ஆயிரம் ரூபாவைக் கேட்டவர் கத்திவெட்டுக்கு இலக்கான சம்பவம் கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நாகன் ஐயாத்தம்பி (வயது 40) என்பவர் கழுத்திலும், நெஞ்சிலும் கத்திவெட்டுக்கு பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## கயிறு திரிக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மின்சாரம் மூலம் கயிறு திரிக்கும் நான்கு இயந்திரங்களை வடக்கு — கிழக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களம் வழங்கியுள்ளது.

பளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு இரண்டு இயந்திரங்களும் தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குத் தலா ஒவ்வொரு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-3)

## தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மருதனார்மடம் திறந்த வெளி அரங்கு மைதானத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (3-31)

# யாழ். நிலைமைகளை நேரில் அறிய உலகவங்கிக் குழு இங்கு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்ட நிலைமையை நேரில் அறிவதற்கும் அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்கும் உலக வங்கியின் குழு ஒன்று அடுத்த மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

ஒருவார விஜயத்தை மேற்கொண்டுவரும் இந்தக் குழுவில் வதிவிடப் பிரதிநிதி திருமதி மரியானா போடேபறா, கல்வித் திட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திருமதி சரா தகநாயக்க, திட்ட முகாமையாளர் நிஹால் பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெறுகின்றனர்,

இந்தக் குழு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். அரச அதிபர் உட்படப் பல அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் குடாநாட்டின் நிலைமை சீரானதாக இல்லை எனக் காரணம் காட்டி அந்தத் திட்டங்களை உலகவங்கி இடைநிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## அதிபர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி ஜூலை 30

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வு

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்குவது தொடர்பான நிகழ்வுகள் இன்று முதல் மூன்று தினங்கள் வெவ்வேறு இடங்களில் இடம்பெறவுள்ளன.

மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில், வடக்கு அபிவிருத்தி. புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளும் பங்குபற்றவிருக்கின்றனர்.

சத்துணவு வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களின் விவரம் வருமாறு:-

★ இன்று காலை 9-00 மணிக்கு— யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

★ நாளை காலை—நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

★ நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9-00 மணிக்கு வடமராட்சி, தென்மராட்சி வலயங்கள். (ஐ-3-9)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் தலைவர் வீ. குமாரசாமி தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (3-4)

# யாழ்.கல்வியியல் கல்லூரிக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

## விளையாட்டு விழாவில் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட ஈ. பி. டி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. குகேந்திரன் தெரிவித்தார்.

கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடந்த இந்த விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;-

யாழ்ப்பாண மண் கல்விக்கு முதன்மை அளிப்பது, இதற்கமைய நாம் பல கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

மிக நீண்ட காலமாக மாகாணத் தமிழ்த்தினம், விளையாட்டுப் போட்டிகளில் யாழ்,மாவட்ட மாணவர்கள் கலந்து கொள்ள முடியாமல் இருந்தது. இந்நிலையை நீக்கி இம்முறை எமது முயற்சியினால் பல மாணவர்களைப் போட்டிகளுக்கு அனுப்பினோம். பலர் பல வெற்றிகளையும் பெற்றுள்ளார்கள். இவ்வாறாக மேலும் பல கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம் — எனத் தெரிவித்தார்.

பீடாதிபதி கமலநாதன் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க காணியும் பணமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இருந்தும் கட்டடம் அமைப்பது காலதாமதமாகிச் செல்வது கவலை அளிக்கின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தற்சமயம் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அங்கு இயங்கும் கல்வியியற் கல்லூரிக்கும் ஆசிரிய கலாசாலைக்கும் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றார்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன், கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு பரஞ்சோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வியியல் கல்லூரிக்கான புதிய கட்டட வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்ய உரிய ஒப்பந்தகாரர் எவரும் குடாநாட்டில் இல்லாததால் கட்டடப்பணி தாமதமாவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

## வட்டுக்கோட்டைக்கு நாளை தந்திரதேவா சுவாமிகள் விஜயம்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்து சமயத் துறவியான ஸ்ரீமத் தந்திர தேவா மகராஜ் சுவாமிகள் நாளை - செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டைக்கு ஆன்மீக விஜயம் மேற்கொள்கிறார்.

நாளைக் காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும். பூஜையில் பங்குபற்றும் சுவாமிகள் அங்கிருந்து ஊர்வலமாக வட்டு. மத்திய கல்லூரிக்கு அழைத்துச்செல்லப்படுவார்.

அங்கு சுவாமிகள் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (--3)

## மத்தியகல்லூரி மாணவருக்கு இன்று அனுமதி அட்டைகள்

### பாரம்பரிய நிகழ்வில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மத்திய கல்லூரியில் இருந்து ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பாரம்பரிய முறைப்படி அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மதகுருமார் ஆசி வழங்க ஆசிரியரையும் பெற்றோரையும் வீழ்ந்து வணங்கி அனுமதியட்டையை மாணவர் பெறும் வைபவம் கடந்த நான்கு வருடங்களாக இக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

உரிய மாணவர்கள் இன்று காலை வந்து உரிய படிவங்களை நிரப்பி ஒப்பமிட்டு நண்பகல் அனுமதியட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஐ:3)

## கொழும்பு திரும்பியது

யாழ்ப்பாணம், ஜூலை 30

குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றப் புலனாய்வுப் பொலீஸார் நேற்று முன்தினம் இங்கிருந்து கொழும்புக்குத் திரும்பியுள்ளனர்.

தொடர்ந்து இந்த விசாரணைகளை இங்கு நடத்துவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவின் மற்றொரு குழுவினர் இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழனன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-4)

★ ★ ★

தெல்லிப்பழைகுருக்கள்கிணற்றடிகணேஸ்வரம் விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்த புதன்கிழமை 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்துபத்துத்தினங்கள் திருவிழா இடம்பெறும்.

உற்சவ தினங்களில் மாலை 4 மணிக்கு பெரியபுராணம் பற்றி மகாஜனக் கல்லூரி உப அதிபர் செ. இராஜகுலேந்திரன் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார். (க-86)

★ ★ ★

ஏழாலை சூராவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. தேர்த்திருவிழாவன்று மாகேஸ்வர பூசை இடம்பெறும். (ம)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி நோன்பு உற்சவம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணி முதல் மகாலட்சுமி அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், தீபாராதனைகளும் நடைபெற்று, அம்பிகை உள்வீதியுலா வருதலும் இடம்பெறும். க-7]

## மாகியப்பிட்டி தவறணையில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 30

மாகியப்பிட்டிப் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணை ஒன்று கடந்தவியாழக்கிழமை இரவு இனந்தெரியாத சிலரால் உடைக்கப்பட்டு உள்ளே இருந்த ஒருதொகை கள்ளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:

கடந்த வியாழக்கிழமை இரவு மாகியப்பிட்டி இரட்டைப்புலம் வைரவர் கோயிலில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது இக் கோயிலுக்கு சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருந்த மேற்படி கள்ளுத் தவறணையே சிலரின் கைவரிசைக்கு இலக்கானது.

தவறணையின் கூரையைப் பிரித்து இறங்கிய சிலர் அங்கு 'பரல்'களில் நிரப்பிவைக்கப்பட்டிருந்த பெருமளவு கள்ளை எடுத்துச் சென்றுள்ளனர். அத்துடன் உள்ளே வைக்கப்பட்டிருந்த 'லாம்பை'யும் அவர்கள் கொண்டுசென்றுள்ளனர்.

இதேவேளை —

இந்தத்தவறணைக்கு அண்மையில் கட்டப்பட்டிருந்த சில 'ரியூப்லைற்'களும் சிலரால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (க-4)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமக்கள் தேவை. 30வயதுக் குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப்போட்டோ, குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (90477)

## வீட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு

4 BURNERS, GRILL AND OVEN - 1990இல் இறக்குமதி செய்யப்பட்ட மின் அடுப்பும், தளபாடங்களும், விற்பனைக்குண்டு. MRS.R.P. CHELLIAH, ELEPHANT VILLA, DARCH ROAD, UDUVIL. (90539)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், கல்வளைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பயன்தரு மரங்களுள்ள 3 3/4 பரப்புக காணியில் நான்கு அறைகளைக் கொண்ட புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு. MRS.R.P. CHELLIAH, ELEPHANT VILLA, DARCH ROAD, UDUVIL. (90538)

## படிவம்

தேசிய கல்விக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவு திகதி: 10.08.2001. வர்த்தமானி பார்வைக்கு உண்டு. பாரதி, 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081. (C-17375)

## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

☆ 24.07.2001 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.
☆ 05.08.2001 அன்று படச்சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.
☆ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வீடியோ கசற்று எடுத்துவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கலாம்.

UTHAYAN VIDEO
7.7/4, Ground floor,
Orchand building, Galle Road,
Wellawatha,
Colombo - 06.

நல்லூர் 021 - 2604 (90593)
புலோலி 070 - 212720

## மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்

கடந்த 36 வருடங்களுக்கு மேலாக அளப்பரிய வங்கிச்சேவை ஆற்றி எல்லோராலும் "ஐயா" என அன்புடன் அழைக்கப்படுகின்றவராகிய,

### உயர்திரு. சின்னத்துரை குமாரசாமி அவர்கள்

வங்கியில் காசாளராகச் சேர்ந்து, உதவி முகாமையாளராக உயர்ந்து இன்று (30.07.2001) திங்கட்கிழமை முதல் ஓய்வு பெறுகின்றார். அன்னாரது அளப்பரிய சேவையினை நினைந்து எமது இலங்கை வங்கி, சுன்னாகக் கிளையின் முகாமையாளரும், ஊழியர்களும் வாழ்த்தி நிற்கின்றோம்.



உயர்திரு. சின்னத்துரை குமாரசாமி

"தேசத்தின் வங்கி மீது பாசத்தை வைத்து - நாளும்
நேசமாய் மக்கள் சேவை நிறைவுடன் செய்தீர் ஐயா!
மாசற்ற மணியே! எங்கள் மன்னவா குமாரசாமி
ஈசனின் அருளால் என்றும் இன்பமாய் வாழி வாழி!"

*இவர் ஊழியருடன் மட்டுமன்றி – சகல*
*வாடிக்கையாளர்களுடனும் கனிவாகப் பேசி*
*அவர்கள் தேவையைப் பூர்த்திசெய்து*
*வங்கிக்குப் புகழ் சேர்த்தவர்.*

30.07.1941 இல் கோப்பாயில் பிறந்த ஐயா அவர்கள் கோப்பாய் நாவலர் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் ஆவார். கொழும்பில் தனது வங்கிச் சேவையை ஆரம்பித்த இவர், அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றி தனது பிறந்த நாளாகிய இன்றுவரை தனது கடமையை, எங்கள் வங்கிக்கும் தனது மண்ணுக்கும் ஆற்றி வந்த செயல் வீரரை, அவரது பிறந்த நாளான இன்று வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். ஐயா அவர்கள் தொடர்ந்தும் மக்களுக்கு அரிய பல சேவைகள் செய்து, பல்லாண்டு காலம் வாழ வேண்டி எல்லாம் வல்ல தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கைவங்கி,
சுன்னாகம்.

(C-17627)

## புறொயிலர் குஞ்சுகள்

Prima இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (90562)

## தவறிவிட்டது

வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம் பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த மாணிக்கம் பொன்னுத்துரை என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 503150450V), விசேட அ.அட்டை, தொழில் அ.அட்டை என்பன நல்லூர்க் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (90587)

சின்னத்துரை சிவரத்தினம் என்பவரின் தேசிய அ.அட்டை (இல. 340571460V), விசேட அ.அட்டை அடங்கிய கறுப்புப் பேர்ஸ் நெல்லியடிக்கும் கலட்டி வீதி வீட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி மொடேன் ஸ்ரோசில் அல்லது திருப்பரங்குன்றம், கலட்டி வீதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90574)

தங்கவேல் கேசினி வசந்தமலர் என்பவரது வி.அ.அட்டை (இல. 0907010129), தே.அ.அட்டை இரண்டும், வல்லி செல்லம்மா என்பவரது வி.அ.அட்டையும் மானிப்பாய்க்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நா.தங்கவேல், நாகம்மாள் வீதி, உடுவில் கிழக்கு என்னும் முகவரிக்கு தகவல் தரவும். (90597)

## படிவம்

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு III தரம் III பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன், மானிப்பாய். (90600)

## தரம் ஒன்று மாணவர் விவரம் திரட்டு

தென்மராட்சி,ஜூலை30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களின் பெயர் விவரங்களை இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

வடமராட்சியில் இயங்கும் பாடசாலைகள் நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்திலும், வலிகாமம் பகுதியில் இயங்கும் பாடசாலைகள் உரும்பிராயில் உள்ள சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்திலும் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் சத்துணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அடுத்தே இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன. (ம-117)

## பெற்றோருக்கு கருத்தரங்கு


வடமராட்சி. கிழக்கு,ஜூலை30

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் பெற்றோர்களுக்கு, சனத்தொகையும் குடும்ப வாழ்வும் தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியிலுள்ள ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பெற்றோர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்வர். (க-182)

பேராசிரியரை
**வாழ்த்துகிறோம்**
*யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்*
**Dr. சபா ஜெயராசா**
அவர்கள்
(Head fine Arts)
பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
செ.ரமேஷ் J.P.
LGA - நவாலி. (C/17628)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



## மீட்சிதந்தெழு மயிலவா!

ஆவலாயெமை ஆழுயாழ்நகர் ஆறுமாமுக நல்லையா
தேவரின்குறை தீர்த்துஅன்னவர் சேமவாழ்வினைக் காத்தவா
காவலாகவா காப்பனென்றுவா கருமமாகவா கந்தவா
மேவலுற்றுயர் மேன்மையுற்றிட மீட்சிதந்தெழு மயிலவா

- முருகனடியான் -

## கண்மூடிய மர்மம் என்ன?

அறுபடை வீட்டிற்கெல்லாம்
அதிபதி நீயே அன்றோ?
உறுபிணி அனைத்தும் மாய்க்கும்
உன்னத வேல் உனதாமன்றோ?
மறு வீலா பக்தர் நாளும்,
மண்மிசை புரளக் கண்டும்,
இறுக்கமாய் நின் கண்ணை மூடி,
இருப்பதன் மர்மமென்ன?

- விகடகவி -

## பொல்லாத வினை போக்கும் நல்லூரின் நாயகனே!

ராகம்:தோடி தாளம்:ஆதி

எடுப்பு

நல்லை நகர் கந்தனே ஞானவடிவேலவனே
தொல்லை வினை தீர்த்தருளும் தாயவனே சண்முகனே!
–நல்லை

தொடுப்பு

கல்லையொத்த மனமும் கசிந்துருகச் செய்திடுவாய்
இல்லையினித்துன்பமென்றே இருகரங்கூப்புகின்றோம்!
–நல்லை

முடிப்பு

தில்லையில் ஆடுகின்ற நடராஜனின் திருமைந்தனே
நல்லை நகருறையும் குகனே நற்றமிழ்க் காவலனே
அல்லலைத் தீர்த்தெமக்கு அற்புதங் காட்டிடுவாய்
வல்லபை கணபதியின் வாஞ்சையுள்ள சோதரனே!
–நல்லை

நல்லூரிலே அமர்ந்து நல்லாட்சி புரிகின்றாய்
எல்லோர்க்கும் அருள்புரியும் வள்ளி மணாளன் நீயே
பல்லோரும் பணிந்தேத்தும் பரம தயாளன் நீயன்றோ
பொல்லாத வினை போக்கும் நல்லூரின் நாயகனே!
–நல்லை

-கவிமணி இராசையா ஸ்ரீதரன்

## நல்லதொரு தீர்வைத் தாராய்!

நல்லைதனில் கோயில் கொண்டகுமரா
நாளைதனில் நம் வாழ்வு புலர
தொல்லைகளும் தொலையா மண்ணில்
சோகங்களும் நிலையா உதிர
சொல்லும் மொழி ஏதன்றி வேலா
வெல்லும் வரம்வேண்டி நாளாய்
எல்லையில்லா நின் பாதம் பற்றுகின்றோம்
நல்லதொரு தீர்வைத் தாராய்!

க.நாகேஸ்வரா
(சண்டிலிப்பாய்)

## வழி காத்தவேல்

*கல்விக்கு அருள் கொடுத்த வேல்*
*கணனிக்கு பொருள் கொடுத்த வேல்*
*வள்ளிக்கு காதலை கொடுத்த வேல்*
*வன்னிக்கு காவல் கொடுத்த வேல்*
*எரிமலையில் நதி எடுத்த வேல்*
*எழும்வலையில் வீதி தடுத்த வேல்*
*பொறி நெருப்பில் விழி காத்த வேல்*
*பேய் வந்தும் வழி காத்த வேல்.*

நெல்லை மகேஸ்வரி

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

### அருள்மிகு உலோல சிட்டிப் பிள்ளையார் கோயில்

அராலி மத்தி



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்துசமய கலாசார அமைச்சர் மாண்புமிகு கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான உயர்திரு.

**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களுக்கும்



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பாளரும் அதன் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை போசகருமாகிய உயர்திரு.

**ந.திரிலோகநாதன் (லோகன்)** - J.P.U.M.)

அவர்களுக்கும்

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறைகொண்டு நிதி வழங்கியமைக்காக ஆலய வழிபடுவோர் சார்பில் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவர்களின் பணி மேலும் சிறக்க வாழ்த்துவதோடு சகல சம்பத்தும் நீண்ட ஆயுளும் கிடைக்க அருள்மிகு உலோலசிட்டிப் பிள்ளையாரை வேண்டிநிற்கிறோம்.

**- ஆலய பரிபாலன சபை.**

(90610)

## உளங்கனிந்த நன்றிகளையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்


எமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தர பல வழிகளிலும் உதவிய



வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்துசமய கலாசார அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளருமாகிய

**உயர்திரு.ந.மதனராஜா (மதன)**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்களையும்

வேலணை பிரதேச சபைத் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை அமைப்பாளரும் ஆகிய

**உயர்திரு.ந.கருணாகரகுருமூர்த்தி**

அவர்களையும்

மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களது சேவை மேன்மேலும் தொடர வேண்டி நிற்கின்றோம்.

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, வேலணை.**

(90612)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பிரதம லிகிதர் சி.சிவப்பிரகாசம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சின்னம்மா சிதம்பரப்பிள்ளை

அவர்கள் 27-07-2001 காலமாகிவிட்ட செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள்
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, புளை (நெல்லியடி).**

(90609)


நாகம்ஸ் சுன்னாகம்

அஜித் (மாறுபட்ட 7வேடங்களில்) வசந்துராதாஸ், மீனா நடித்த

சிட்டிசன் (ரீல்ஸ்)



காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்) (90533)


### நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை30

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை ஐந்து மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும் அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் குருபூர்த்த ஆலயத்தில் விசேடபூசை, தீபாராதனை வழிபாடுகளின் பின்னர் 'கந்தபுராணம்' புராணபடன நிகழ்வு இடம்பெறும்.

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் மாலை 6 மணிக்கு வக்சலா செல்லத்துரையின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (க-86-17)

* * *

கம்பன் கோட்டத்தில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் கந்தபுராணச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (க-4-86-17)

### பரிசுத் தினமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் பரிசுத்தின விழாவும் 'சுடரொளி' மலர் வெளியீட்டு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி திறந்த வெளிய ரங்கில் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா, முன்னாள் அதிபர் சி.சிவசரவணபவன் (சிற்பி), லாவண்யா நகை மாளிகை உரிமையாளர் சின்னராசு தேசு பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்லூரி மலரான 'சுடரொளி' சஞ்சிகை மிக நீண்ட கால இடைவெளியின் பின் வெளியிடப்படுகிறது. வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர் ஒருவரின் நிதி உதவியுடன் இந்த சஞ்சிகை வெளியிடப்படுகிறது. (ஐ)

### வாக்காளர் அட்டை விநியோகம்

சர்வஜன வாக்கெடுப்புக்கான வாக்காளர் அட்டைகளை நாடு முழுவதும் ஏழு தினங்களில் விநியோகிக்க தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தபால் மா அதிபர் டபிள்யூ.எம்.பியசேன தெரிவித்தார்.

அடுத்த மாதம் பத்தாம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)


I.B.S கல்வி நிறுவனம் சண்டிலிப்பாய்.

புலமைப் பரிசில் விசேட வகுப்புக்கள் நாளை 31.07.2001 ஆரம்பம் மாலை 2.00 - 6.00p.m.

அனைத்துப் பாட அலகுகளும் உள்ளடங்கலாக அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! (90618)

வின்சர் இனுவில்

அர்ஜுன் - அபிராமி நடிப்பில்

வானவில்

தினசரி 10.30, 2.30 (ப.நே.) 01-08-2001 முதல் M.G.R இன் உரிமைக்குரல் (ரீல்ஸ்) (90617)

ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த், சாக்ஷி, பிரகாஷ்ராஜ், ரம்யாகிருஷ்ணன், நாசர் மற்றும் பலர் நடிப்பில்

வாஞ்சிநாதன்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்) சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(ப.நே.)

அடுத்த வெளியீடு:- ப்ரண்ட்ஸ் (C/7443)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் தேவஸ்தானம்

மேற்படி ஆலய கோபுர திருத்த வேலைகளுக்கு ஆரம்பக் கொடுப்பனவாக ரூபா நான்கு லட்சம் நிதியுதவி உடன்வழங்கிய



மாண்புமிகு கௌரவ அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்



வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் **திரு.K.கமலசேகரன் (பாபு)** அவர்களையும்

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினரும், திருப்பணிச் சபையினரும்.
**குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம்,** குப்பிழான்.

(90604)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய இராஜ கோபுரம் திருத்தல்

எமது ஆலயத்தில் கூலி ஒப்பந்த அடிப்படையில் கோபுர வேலை, சிற்ப வேலை, வர்ணம் தீட்டல் ஆகிய வேலைகள் ஆரம்பமாக உள்ளதால் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுச் செய்ய விரும்புவோர் நேரில் பார்வையிட்டு விண்ணப்பத்தை நேரிலோ அல்லது கடித மூலமாகவோ 08-08-2001 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விண்ணப்பம் அனுப்பவேண்டியமுகவரி:-
செயலாளர்,
பரிபாலன சபை,
கற்கரைக் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.
குப்பிழான்.

*செயலாளர்,*
பரிபாலன சபை,
திருப்பணிச் சபை சார்பாக.

(90606)

கணபதிதுணை நமஹ

### குப்பிழான் திருவருள்மிகு கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில்

## மஹோற்சவ அறிவித்தல்

அடியார்களே!

எம்பெருமானின் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 25-07-2001 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் காலை 6 மணிக்கும், மாலை 3 மணிக்கும் பூசைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

**தேர்த்திருவிழா**

எதிர்வரும் (03-08-2001) வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

**தீர்த்தத்திருவிழா**

(04-08-2001) சனிக்கிழமை பகல் 10.34 மணிக்கு நடைபெறவுள்ளது.

**திருக்கல்யாணம்**

05-08-2001 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

மஹோற்சவ பிரதம குரு:-
*சிவஸ்ரீ சி.குமாரராஜக்குருக்கள்*

எம்பெருமானது சந்நிதியில் 11 வருடங்களின் பின் மேற்படி மஹோற்சவம் நடைபெறும் இத்தருணத்தில் அடியார்கள் தவறாது வருகை தந்து பெருமானைத் தரிசித்து இறையருளைப் பெற்றேகும்படி வேண்டுகின்றோம்.

சிவ சிவ

ஆலய பரிபாலன சபை,
குப்பிழான்.

(90605)

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் அம்பலவாணர் குலசேகரம்

திதி: 30-07-2001

நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி கு. தனலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவர் அ. குலசேகரம் அவர்கள் இறைபதம் அடைந்து ஓராண்டு பூர்த்தியடையும் இவ்வேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,
(90608) யா/நுணாவில் மேற்குஅ.த.க.பாடசாலை.

# சர்வஜன வாக்கெடுப்பை நிறுத்தி அரசியல் இணக்கத்துக்கு வாருங்கள்!

## ஜனாதிபதியிடமும் ரணிலிடமும் ஆயர்கள் கோரிக்கை

கொழும்பு,ஜுலை30

சர்வஜன வாக்கெடுப்பை உடனடியாக ரத்துச் செய்துவிட்டு ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் நாடாளுமன்ற மட்டத்தில் ஒன்றிணைந்து செற்படவேண்டும்.

- இவ்வாறு கத்தோலிக்க ஆயர்கள் ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சித் தலைவரிடமும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் மீளப்பெறவேண்டும் என்றும் அதன்மூலம் ஓர் இணக்கமான சூழ்நிலை ஏற்படும் எனவும் -

ஆயர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம் இது தொடர்பாக விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் -

தற்போதைய அரசியல் சட்டத்தை உடனடியாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்றைய அரசியல் நெருக்கடிக்கும் ஸ்திரமின்மைக்கும் அதுவே காரணமாக இருக்கிறது. ஆயினும் அதற்குப் பரிகாரம் காண்பதற்காக நாடாளுமன்ற நடைமுறைகளை சூழ்ச்சியாக மாற்றிச் செயற்படக் கூடாது.

அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்குக் கருத்துக் கணிப்பு ஒன்று தேவை என்ற நிலை ஏற்பட்டது குறித்து மக்கள் குழப்பமடைந்துள்ளனர். பொதுமக்களிடம் கேட்கப்படும் கேள்வியின் தெளிவற்ற தன்மையைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது அது அவசியம்தானா எனக் கேட்கத் தோன்றுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



வல்வை மாவட்ட வைத்தியசாலை தொடராக நடத்திவரும் இலவச கண்ணாடி வழங்கும் விழாவின் ஏழாவது நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

அந்த விழாவில் கண்ணாடி பெற வந்த ஒருவருக்கு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.குணானந்தம் கண்ணாடியை அணிவிப்பதை படத்தில் காணலாம். (ஐ)

# புதிய அரசமைப்புத் தொடர்பாக சர்வகட்சி மாநாட்டில் ஆராய்க!

## தினேஷ் குணவர்த்தன கோருகிறார்

கொழும்பு,ஜுலை30

சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி புதிய அரசமைப்புக் குறித்து ஆராய வேண்டும் என்றும் -

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் முயற்சியை கைவிடவேண்டும் என்றும் -

அரசின் கூட்டணிக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஜனாதிபதியிடம் கோரவிருக்கின்றார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியை அவர் சந்திக்கும் போது இந்தக் கோரிக்கையை அவரிடம் விடுக்க இருப்பதாக தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

ஜனநாயகத்துக்கு விரோதமான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஆதரவு வழங்கி நற்பெயரை கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்று மல்வத்தை மகாநாயக்கர் தம்மிடம் கோரியுள்ளதாகவும் -

இதையடுத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை கைவிடும்படி தாம் பிரதமரிடம் கோரியதாகவும் -

தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார். (ஐ-3)

# ஆறுக்கும் அதிக மினிபஸ்கள் சாரதிகளுடன் தடுத்துவைப்பு!

## ஆயினும் 'அந்த சொகுசு பஸ்' அகப்படவில்லை

கொழும்பு,ஜுலை30

கட்டுநாயக்காவில் உள்ள விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் அணியை ஏற்றிவந்து அப்பகுதியில் இறக்கிவிட்டுச் சென்றதாகக் கூறப்படும் சொகுசு மினி பஸ்ஸை பொலீஸார் தொடர்ந்தும் தீவிரமாகத் தேடிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப பஸ்ஸைக் கண்ட நபர் ஒருவரின் சாட்சியத்தின் அடிப்படையில் அதுபோன்ற ஆறுக்கும் மேற்பட்ட சொகுசு மினி பஸ்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றின் சாரதிகள் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும் -

ஆறு குழுக்களாக நடைபெற்று வரும் இந்த விசாரணை நான்கு சிரேஷ்ட பொலீஸ் அட்தியட்சகர்கள், ஆறு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் ஆகியோரின் தலைமையில் நடைபெறுவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே விமானப்படைச் சிப்பாய்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

பஸ் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான 20 பேர் அப்பகுதியில் வந்திறங்கியதாகவும், அவர்கள் மூன்று பெரிய உரப்பைப் பொதிகளைத் தூக்கிச் செல்வதைக் கண்டதாகவும் அப்பகுதி வாசி ஒருவர் மேற்படி சிப்பாய்கள் இருவரிடமும் கூறியிருந்தபோதிலும் அதனை அவர்கள் அலட்சியம் செய்து விட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (ஐ)

## சாலையில் விமானத் தாக்குதல்

கொழும்பு,ஜுலை30

முல்லைத்தீவுக்கு வடமேற்கே சாலைப் பகுதியில் அமைந்துள்ள கடற்புலிகளின் முகாம்கள் மீது விமானப் படையின் 'ஜெட்' விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3-9)

## ஷெல் தாக்குதல்

கொழும்பு,ஜுலை30

நாகர்கோயில், எழுதுமட்டுவாழ், கிளாலி ஆகிய படை நிலைகள் மீது நேற்றுமுன்தினம் காலையில் விடுதலைப் புலிகள் ஆட்லரி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் நான்கு படையினர் காயம் அடைந்தனர் என்றும் தகவல் நிலையம் தெரிவித்தது.(ஐ-3)

## அரசமைப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பின் அறிமுகம் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருவதாக அமையும். எனவே அது குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயப்படுவதாகத் தோன்றுகின்றது.

நாட்டில் பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு ஏற்பட்டால் தமிழ்ச்சமூகம் தன்னை நிராகரித்துவிடும் என்று புலிகளின் தலைவர் நன்கு அறிவார்.

இதனால்தான் அரசமைப்பு மாற்றும் முயற்சியை அவர் சீர்குலைத்துள்ளார்.

எவ்வாறெனிலும் ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கட்டாயமானது.

சிங்கள ஆட்சியாளர்கள் தலைமையிலான அரசு என்றாலும் கூட, அது நாடாளுமன்றம் மூலம் அதன் உரிமைகளை பாதுகாக்கத் தவறும் பட்சத்தில் தமிழ் மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கமாட்டார்கள்.

யுத்தத்தை முடிவுகட்ட முடியாமல் போனதற்காகப் பல்வேறு காரணங்களை முன்வைத்து அரசு சமாதானம் கூற முனையாது.

முன்னைய ஆட்சியாளர் காலத்தில் ஒரு வருடத்தில் மாத்திரம் கொழும்பில் பத்துப் பாரிய குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன.

தற்போதைய ஒடுக்குமுறை அரசமைப்பு நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டது. எனவே அது சட்டத்தின் அடிப்படையில் மாற்றப்பட வேண்டும்.

மக்களின் கருத்துக்களும் இவ்வாறே இருக்கின்ற சமயத்தில் இதே அரசமைப்பு தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்று கூறும் உரிமை ஐ.தே. கட்சிக்குக் கிடையாது - என்றார்.

## கயிறு திரிக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஜுலை30

மின்சாரம் மூலம் கயிறு திரிக்கும் நான்கு இயந்திரங்களை வடகு - கிழக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களம் வழங்கியுள்ளது.

பளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு இரண்டு இயந்திரங்களும் தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா ஒவ்வொரு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-3)

## கூட்டணியினர் ஜனாதிபதியை சந்திப்பர்

கொழும்பு,ஜுலை30

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் ஒகஸ்ட் 8 ஆம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்ட பெண்டி கூட்டணியினருக்கு அறிவித்திருக்கிறார். (ஐ-9)

NIRU TUITION CENTRE
KONDAVIL
2002 PAPER CLASS
CHE.
N.மகேஸ்வரன்
PHY.
S.சோதிலிங்கம்
ஆரம்பம்:-
(90613) 01-08-2001

தேவை
SUBRA (14)
சித்தன்கேணி.
☆ உதவி நிர்வாகிகள்
☆ ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
☆ சந்திக்கும் நேரம்
திங்கள், செவ்வாய், வியாழன்
(90602) 3 - 6 மணிவரை.

# ஜனாதிபதி புதிய அரசமைப்பை ஒகஸ்ட் 23 இல் வெளியிடுவார்?

கொழும்பு,ஜுலை30

அடுத்த மாதம் 23ஆம் திகதி கொழும்பு, காலிமுகப்பகுந்தரையில் வைத்து புதிய அரசமைப்பு ஒன்றை ஜனாதிபதி பிரகடனம் செய்யவிருக்கின்றார்.

இந்த விடயத்தை அரச உயர் வட்டாரங்கள் எதிர்க்கட்சிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் 21ஆம்திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை அடுத்தே இந்தப் பிரகடனம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 23ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த - ஜனாதிபதிக்கு மிக விசுவாசமான அமைச்சர்கள் பங்குபற்றிய - கூட்டத்தில் இந்தப் பிரகடனம் குறித்து முடிவு எடுக்கப்பட்டது என்றும் -

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தப் பிரகடனம் குறித்து கடும் விசனம் அடைந்துள்ளார் என்றும் -

அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-3)

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கின்றது.

1978 இல் இந்த அரசமைப்பு கொண்டுவரப்பட்ட சமயம் மலையக மக்களின் சார்பில் எமது கட்சியின் ஸ்தாபகர் தொண்டமான் மட்டுமே நாடாளுமன்றத்தில் இருந்தார்.

ஆனால் இன்று எங்கள் மலையக மக்களின் சார்பில் ஒன்பது, பத்துப் பேர் எம்.பிக்களாக உள்ளனர்.

எனவே தற்போதைய பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை மாற்றும் எந்த அரசமைப்புக்கும் நாம் ஆதரவளித்தாலும் அது எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை நாமே ஒழிப்பதாகிவிடும்.

அதனால் அத்தகைய திட்டத்துக்கு ஆதரவு தரமுடியாது என்று நாம் ஜனாதிபதியை இரு தினங்களுக்கு முன்னர் சந்தித்துத் தெரிவித்துவிட்டோம்.

ஆனால் அவர் அதற்கு மாற்றுவழி இருப்பதாகவும் -

அது பற்றித் திங்களன்று (இன்று) எமக்குத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

எமது நாடாளுமன்றக் குழு ஒன்று திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்து அது குறித்துக் கேட்டறியும். ஜனாதிபதி தெரிவித்த யோசனைகள் குறித்து நாம் பின்னர் பரிசீலித்து முடிவு செய்வோம். -

மலையக மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் குறைக்கும் அல்லது அது குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்தும் எந்த அரசமைப்புக்கும் நாம் ஆதரவளிக்கமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ).

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளிடமும் வழங்கப்படும் என்றும -

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தை இடைநிறுத்தியமை, அதிகாரத் துஷ்பிரயோகம், மற்றும் நம்பிக்கைத் துரோகம் ஆகியவை உட்பட 12 குற்றச் சாட்டுகள் ஜனாதிபதிக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ளன. (ஐ)

## சக்திமிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழந்தனர் மற்றுமொருவர் காயமடைந்தார்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் குலேந்திரகுமார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மன்னாரைச் சேர்ந்த மீனவரான கமிலஸ் என்பவருடன் இவர் பணியாற்றுகின்றார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இரு வருடங்களுக்கு முன்னர் வந்த இவர் அன்று முதல் கமிலஸ் என்பவருடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றார். இவருடன் அங்கு 15 பேர் வேலை செய்கின்றனர்.

புலேந்திரகுமாருடன் கொல்லப்பட்டவர் தற்கொலையாளி என நம்பப்படுகின்றது. அவர் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி அல்லது அவர்களது உதவியாளர் எனத் தெரிய வருகின்றது.

அந்த நபர் அணிந்திருந்த தற்கொலை அங்கியில் பொருத்தப்பட்ட குண்டே வெடித்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-9)



வெளிவந்துவந்துவிட்டது
2001இல் இருந்து அறிமுகமாகும் A/L மாணவர்களுக்கான "பொது ஆங்கிலம்" மாதிரிவினாத்தாள்கள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பரீட்சை திணைக்களத்தால் வெளியிடு செய்யப்பட்ட வினாப் பத்திரங்களையும் உள்ளடக்கியது
தொகுப்பு: த.தனேந்திரன்
B.Com (Hons), M.M.Spl. H.N.Dip. in Acc.
கிடைக்கும் இடங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை
சிறிலங்கா புத்தகசாலை
துர்கா ஸ்ரோவர்ஸ் (சுன்னாகம்)
வெளியீடு : I .P.E SRI LANKA

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.